விலை ரூபா: 3-50

# ஈழநாதம்

THE EELANAATHAM

நாதம் 01 | சுக்கில ஹு மாசி மீ 18-ம் உ | வெள்ளிக்கிழமை | (02 - 03 - 1990) | ஹிஜ்ரி 1410 | ஷஃபா 04 | ஓசை 12

## வீடமைப்புத் திணைக்களத்தில் தளபாடங்களும் மாயம்!

(யாழ்ப்பாணம்)

தேசிய வீடமைப்பு திணைக்கள அலுவலகத்தில் மூன்று லட்ச ரூபா பெறுமதியான மின் உபகரணங்கள் மறைந்து விட்டனவாம். இந்திய அமைதிப்படையினர் குடிகொண்டிருந்த இந்தக் கட்டிடம் அவர்கள் வெளியேறியபின் சென்று பார்த்தபோது சூறையாடப்பட்டுள்ளதாக இந்த திணைக்கள அதிகாரி தெரிவித்தார்.

இதுதவிர அலுவலகத்துக்கு சொந்தமான தளபாடங்கள், வாகனங்கள், நீர் இறைக்கும் இயந்திரம் ஆகியவற்றையும் அங்கு காணவில்லையாம். இதனால் அப்பகுதியில் இயங்கிவந்த ஏழு திணைக்களப் பிரிவுகளும் இப்பொழுது இயங்க முடியாத நிலை காணப்படுவதாகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். (லோ)

# "ஈழ ஜனநாயக குடியரசு அரசியல் நிர்ணயசபை"

## வடக்குக் கிழக்கு மாகாணசபை பிரகடணம்
## பிரேமதாசா அரசு உதாசீனம்

(திருகோணமலை)

"சுதந்திரதன்னாட்சி உரிமைபெற்ற ஈழம் ஜனநாயகக் குடியரசின் அரசியல் நிர்ணய சபை"யாக தன்னை மாற்றிக் கொள்வதென்று வடக்கு-கிழக்கு மாகாணசபை நேற்றுக் கூடியபோது ஏக மனதாகத் தீர்மானித்தது.

இப் பிரகடனம் பற்றி இலங்கை அரசாங்கம் எதுவித பிரதிபலிப்பையும் காட்டவில்லை. இந்திய வானொலிச் செய்தி தான் இதை முதலில் அறிவித்தது.

தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியிடம் சென்ற வாரம் ஈ. பி. ஆர். எல். எவ். தூதுக்குழு பத்தொன்பது யோசனைகளைக் கொண்ட மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது தெரிந்ததே.

இந்தப் பத்தொன்பது அம்சக்கோரிக்கைகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமென்றும் இதற்கு இலங்கை அரசுக்கு ஓராண்டு கால அவகாசம் கொடுக்கப்படுமென்றும் வடக்கு கிழக்கு மாகாண சபை நேற்று இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்தது. அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் தேதிக்கு முன்னர் இப் பத்தொன்பது அம்சக் கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று மாகாண சபை கோரியிருக்கிறது.

## "பெருமாளின் பிரகடனம் பற்றி யாரும் கவலைப்படவேயில்லை"

— பி. பி. ஸி. விமர்சனம்

வடக்கு - கிழக்கு மாகாண சபையின் அரசியல் நிர்ணய சபைப் பிரகடனம் பற்றி பி. பி. ஸி, தமிழோசை நேற்றிரவு பின்வருமாறு தெரிவித்தது.

ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கத்தின் ஆளுகைக்குள் இருந்து வரும் வடக்கு - கிழக்கு மாகாணசபை தன்னை ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய அசெம்பிளி எனப் பிரகடனம் செய்து கொண்டுள்ளது. இந்த அசெம்பிளியின் தலைவராக வடக்கு-கிழக்கு மாகாண முதல்வர் அண்ணாமலை வரதராஜப்பெருமாள் தன்னைப் பிரகடனம் செய்து கொண்டுள்ளார்.

மாகாணசபைக்கு கூடுதல் சுயாட்சிகோரியும் பாதுகாப்பு விடயத்தில் கூடுதல் அதிகாரம் வேண்டும் என்றும் குறிப்பிட்ட முதல்வர் பெருமாள் தமது இக்கோரிக்கைகள் நிறைவேறும் பட்சத்தில் உத்தேச ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய சட்டமன்றம் மீண்டும் வடக்கு-கிழக்கு மாகாண சபையாக இயங்கும் என்றும் குறுப்பிட்டார்.

### ஒரு வருடத்துக்கு பிரகடனம்

இந்த சட்டமன்றத்திற்கு ஒரு வருட காலத்திற்குள் போதிய அதிகாரங்கள் வழங்கப்படாவிட்டால் அதன்பின் உத்தேச சட்டசபை ஒரு தலைப்பட்சமான சுதந்திரப் பிரகடனம் செய்யப்படும் எனவும் ஈ. பி. ஆர். எல், எவ். இயக்க பேச்சாளர் ஒருவர் குறிப்பிட்டார்,

திருகோணமலையில் மாகாணசபையின் தலைமைச் செயலகம் அமைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது: இப்பகுதியை விடுதலைப் புலிகள்

( 6ஆம் பக்கம் பார்க்க )

## தென்பகுதி வன்செயல்கள் இனி கட்டுப்பாட்டிற்குள் வருமா?

(கொழும்பு)

ஆயுதங்களை யாரும்வைத்திருக்கக் கூடாது என நேற்று முதல் இலங்கை அரசாங்கம் கொண்டு வந்துள்ள தீர்மானத்தின்படி இனிமேல் அரசியல்வாதிகளும் தமது . பாதுகாப்புக்காக ஆயுதங்களைவைத்திருக்க முடியாது.. எனப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா குறிப்பிட்டார்.

இலங்கையில் சுமார் ஒரு லட்சம் பல்வேறு வகையான ஆயுதங்கள் புழககத்தில் இருக்கின்றன. இந்த ஆயுதங்கள் தாராளமாக பயன் படுத்தப்படும் நிலைமைதான் தென்பகுதியில் இடம்பெற்ற குழப்பங்களுக்குக் காரணம் என

( 6ஆம் பக்கம் பார்க்க )

✱ மாகாணசபையை கலைத்து தேர்தல் நடத்துக ✱ 6 வது திருத்தம் நீங்கவேண்டும் ✱ சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும்

# ஈ.பி. ஆர். எல். எவ். 19 யோசனைகள்

## சுந்தரின் நூல்

(யாழ்ப்பாணம்)

சிரித்திரன் ஆசிரியர் சிவ

## இரு ஜிகாத் உறுப்பினர்கள்

# பிரேமதாசா அரசு உதாசீனம்

(திருகோணமலை)

**"சுதந்திரதன்னாட்சி உரிமைபெற்ற ஈழம் ஜனநாயகக் குடியரசின் அரசியல் நிர்ணய சபை"யாக தன்னை மாற்றிக் கொள்வதென்று வடக்கு-கிழக்கு மாகாணசபை நேற்றுக் கூடியபோது ஏக மனதாகத் தீர்மானித்தது.**

இப் பிரகடனம் பற்றி இலங்கை அரசாங்கம் எதுவித பிரதிபலிப்பையும் காட்டவில்லை. இந்திய வானொலிச் செய்தி தான் இதை முதலில் அறிவித்தது.

தமிழக முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியிடம் சென்ற வாரம் ஈ. பி. ஆர். எல். எவ். தூதுக்குழு பத்தொன்பது யோசனைகளைக் கொண்ட மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்திருந்தது தெரிந்ததே.

இந்தப் பத்தொன்பது அம்சக்கோரிக்கைகளை இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டுமென்றும் இதற்கு இலங்கை அரசுக்கு ஓராண்டு கால அவகாசம் கொடுக்கப்படுமென்றும் வடக்கு கிழக்கு மாகாண சபை நேற்று இலங்கை அரசுக்கு எச்சரிக்கை விடுத்தது.

அடுத்த வருடம் மார்ச் மாதம் முதல் தேதிக்கு முன்னர் இப் பத்தொன்பது அம்சக் கோரிக்கைகளையும் இலங்கை அரசு நிறைவேற்ற வேண்டும் என்று மாகாண சபை கோரியிருக்கிறது.

... லவர் அண்மையில் வரத ராஜப்பெருமாள் தன்னைப் பிரகடனம் செய்து கொண்டுள்ளார்.

மாகாணசபைக்கு கூடுதல் சுயாட்சிகோரியும் பாதுகாப்பு விடயத்தில் கூடுதல் அதிகாரம் வேண்டும் என்றும் குறிப்பிட்ட முதல்வர் பெருமாள் தமது இக்கோரிக்கைகள் நிறைவேறும் பட்சத்தில் உத்தேச ஈழ ஜனநாயக குடியரசின் தேசிய சட்டமன்றம்

## இனி கட்டுப்பாட்டிற்குள் வருமா?

(கொழும்பு)

ஆயுதங்களை யாரும்வைத்திருக்கக் கூடாது என நேற்று முதல் இலங்கை அரசாங்கம் கொண்டு வந்துள்ள தீர்மானத்தின்படி இனிமேல் அரசியல்வாதிகளும் தமது பாதுகாப்புக்காக ஆயுதங்களைவைத்திருக்க முடியாது.. எனப் பாதுகாப்பு அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா குறிப்பிட்டார்.

இலங்கையில் சுமார் ஒரு லட்சம் பல்வேறு வகையான ஆயுதங்கள் புழககத்தில் இருக்கின்றன. இந்த ஆயுதங்கள் தாராளமாக பயன் படுத்தப்படும் நிலைமைதான் தென் பகுதியில் இடம்பெற்ற குழப்பங்களுக்குக் காரணம் என

(6ஆம் பக்கம் பார்க்க)

## சுந்தரின் நூல்

(யாழ்ப்பாணம்)

சிரித்திரன் ஆசிரியர் சிவஞானசுந்தரம் (சுந்தர்) கடந்த இருபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக வரைந்த காட்டூன் நகைச்சுவைச் சித்திரங்கள் அடங்கிய நூல் வெகுவிரைவில் வெளியிட்டு வைக்கப்படவுள்ளது. சிரித்திரன் வெளியீடாக வரும் இந்நூலுக்கு ''சிரித்திரன் சித்திரக் கொத்து'' என சுந்தர் தலைப்பிட்டு அழகாக ஆக்கியுள்ளார்.

## இரு ஜிகாத் உறுப்பினர்கள் புலிகளிடம் மூதூரில் சரண்

(மூதூர்)

மூதூரில் விடுதலைப்புலிகளிடம் நேற்று முன்தினம் சரண் அடைந்த ஜிகாத் உறுப்பினர்களான நபீன், ரசாக் ஆகியோர் விசாரணையின்பின் தம்மிடம் இருந்த நான்கு அவுட் மோட்டார் இயந்திரங்கள், இரண்டு மோட்டார் சைக்கிள்கள் உட்பட ஏராளமான பொருட்களைக் கையளித்தார்கள். இதே வேளையில் மூதூரில் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்த லத்தீன் தனது துப்பாக்கியை விடுதலைப் புலிகளிடம் ஒப்படைத்து சரண் அடைந்து இருக்கிறார்.

## ஹரியானாவில் 3 மந்திரிகள் ராஜினாமா

(புதுடில்லி)

ஹரியானாவில் ஏற்பட்ட திடீர் அரசியல் பிரச்சினை காரணமாக முதலமைச்சரின் உறவினரும் முக்கிய அமைச்சருமான றஞ்சித்சிங் பாசன அமைச்சர் விஜேந்திரசிங் உட்பட மூன்று அமைச்சர்கள் நேற்றுத் தமது பதவிகளை ராஜினாமாச் செய்தனர். இவர்களுடன் பாராளுமன்ற விவகார தலைமைச் செயலாளரும் தமது பதவியை ராஜினாமச் செய்துள்ளனர்.

## யாழ்ப்பாண பஸ் ஆசனம் பதிவு செய்யும் நிலையம் இடமாற்றம்

(கொழும்பு)

வெள்ளவத்தை சினி வீடியோ நிறுவனமும், கொழும்பில் ஐந்தாம் குறுக்குத் தெருவில் விகே வர்த்தக நிறுவனமும் கொழும்பு - யாழ்ப்பாணம் இ. போ. ச. பஸ் சேவையில் ஆசனங்களைப் முன் கூட்டியே பதிவு செய்யும் முகவர் நிலையங்களாக இயங்கி வந்தன. ஆனால், ஸ்ரீ லங்கா போக்கு வரத்துச் சபை மேற்கொண்ட திடீர் நடவடிக்கையினால். நேற்று முதல் கொழும்பு - யாழ்ப்பாணம் இ. போ. ச பஸ் சேவையில் ஆசனங்களைப் பதிவு செய்யும் வேலையை இரத்மலானையில் அமைத்துள்ள கொழும்பு மத்திய பஸ் நிலையம் மேற் கொண்டுள்ளது எனத் தெரிய வருகிறது.

இந்த நடவடிக்கையினால் கொழும்பு நகரத்தில் வாழும் தமிழர்கள் பல அசௌகரியங்களை எதிர்நோக்க வேண்டி வரும் என வட பிராந்திய போக்கு வரத்துச் சபை அதிகாரி ஒருவர் கருத்துத் தெரிவித்தார்.

## நினைவுச் சின்னத்துக்கு அடிக்கல்

(மாங்குளம்)

கடந்த வருடம் இந்திய இராணுவத்தினதும் மாற்றுக் குழுக்களினதும் மாங்குளம் முகாம் மீது இடம் பெற்ற அதிரடி தாக்குதலின் போது வீரமரணமடைந்த கப்டன் வண்ணனை (கலைஜீவன் கிளிநொச்சி) கௌரவிக்குமுகமாக மாங்குளம் வர்த்தக சங்கம் தலைமையில் உருவச்சிலை ஒன்று அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழா நேற்று இடம் பெற்றது. விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி வவுனிக்குளம் பிரதேச பெறுப்பாளர் ஜொனி இவ் வைபத்தில் அடிக்கல் நாட்டி வைத்தார்.

## புலிகளின் நிலைமையை புரிந்துள்ள அரசாங்கம்

(கொழும்பு)

இலங்கையில் சட்டவிரோதமாக ஆயுதங்கள் வைத்திருப்பதை நேற்றுமுதல் தடை செய்துள்ள இலங்கை அரசாங்கம் இந்த தடையுத்தரவிலிருந்து தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு விதிவிலக்கு அளித்திருக்கிறது எனக் கடந்த இரவு பி. பி. சி. அறிவித்தது.

இந்தியத்துருப்புக்கள் இலங்கையை விட்டு வெளியேறும் வரையும் சட்டவிரோததேசிய இராணுவம் கலைக்கப்படும் வரை விடுதலைப் புலிகளின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் இருப்பதன காரணமாக அவர்களை ஆயுதங்களை கைவிடுமாறு கோரமுடியாது என பாதுகாப்புத்துறை அமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா நேற்று பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார். தமிழ்ப் புலிகள் ஆயுதங்களை வைத்திருக்கும் விடயம் தொடர்பாக

(6ஆம் பக்கம் பார்க்க)

❋ மாகாணசபையை கலைத்து தேர்தல் நடத்துக ❋ 6 வது திருத்தம் நீங்கவேண்டும் ❋ சிங்களக் குடியேற்றம் நிறுத்தப்படவேண்டும்

# ஈ.பி.ஆர்.எல்.எவ். 19 யோசனைகள்

# தமிழரை நெருக்கடிக்குத் தள்ளும்

## விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுச்சபையின் ஏழு தீர்மானங்கள்

(மட்டக்களப்பு)

**வடக்குக் - கிழக்கு மாகாணசபை உடன் கலைக்கப்படவேண்டும் என்றும் அரசியல் அமைப்பின் ஆறாவது சட்ட திருத்தம் நீக்கப்படவேண்டும் வட - கிழக்கில் அவசரகாலச் சட்டம் அகற்றப்படவேண்டும் என்றும், தமிழ் ஈழத்தில் சட்டம் ஒழுங்கு பிரச்சனைகளில் ஸ்ரீலங்கா இராணுவம் ஈடுபடக்கூடாது என்றும் பல முக்கிய தீர்மானங்கள் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் பொதுக்குழு மகாநாட்டில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.**

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வாகரையில் ஐந்தாவது நளாக நடைபெற்ற பொதுக்குழு மகாநாட்டிற்கு விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. கோபால்சாமி மகேந்திரராஜா (மாத்தயா) தலைமை வகித்தார். இறுதி நாளாக நேற்று நடைபெற்ற மகாநாட்டில் தமிழீழத்தில் இன்றைய நிலைமை மற்றும் தமிழ், முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு குறித்து ஏழு தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்கள் வருமாறு :-

### மாகாணசபையைக்கலைத்து தேர்தல் வேண்டும்

1. வடக்கு-கிழக்கு மாகாண சபை ஜனநாயக ரீதியில் எமது மக்களால் தெரிவு செய்யப்பட்டதாலும், இம் மாகாணசபை நிர்வாகம் நீண்ட காலமாக செயலிழந்து இருப்பதாலும்வடக்கு-கிழக்கு மாகாணசபை உடன் கலைக்கப்பட்டு புதிய தேர்தல் நடத்தப்பட வேண்டும் என பொதுத்குழு தீர்மானித்துள்ளது. வடக்கு-கிழக்கு மாகாணசபையை கலைக்காது ஏற்றுக் கொள்ள முடியாத நிபந்தனைகளை முன்வைத்து ஈழ மக்கள் புரட்சிகர விடுத... முன்னணி மேற்கொ... வரும் நடவடிக்கைகள் ...ழீழத்தில் சமாதானமும், ... நாயகமும், ஜனநாயக அ... யலும் தோன்றுவதற்கு முட்டுக் கட்டையாக அமைந்துள்ளன. எமது மக்களை தொடர்ந்தும் அரசியல் நெருக்கடிக்குள் தள்ளி விடுவதற்கு திட்டமிட்டு மேற்கொள்ளப்படும் இந்த மக்கள் விரோத நடவடிக்கையை பொதுக்குழு வன்மையாக கண்டிக்கிறது.

## கிழக்கில்! இலங்கை இராணுவம் நடமாட்டம்

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் கல்முனை, அம்பாறை, சம்மாந்துறை பகுதியில் இலங்கை இராணுவத்தின் ரோந்து நடவடிக்கைகள் அதிகரித்திருப்பதாக அங்கிருந்து வரும்

(6ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் - முஸ்லிம் அணி திரள வேண்டும்

2. தமிழ், முஸ்லிம் மக்கள் தமது அரசியல் உரிமைகளை வென்றெடுக்கவும், தமது பொருளாதார வாழ்வைமேம்படுத்தவும், தமது தாயக லூரிக்கும், பாதுகாக்கவும் ஒன்று ...போராட வேண்டும் 19 ...வும் ஒரு புரட்சிகர அரசி... இயக்கத்தின் கீழ் ஒரே ...க அணிதிரள வேண்டும் என்றும் பொதுக்குழு தீர்மானிக்கிறது. தமிழ், முஸ்லிம் ஒற்றுமையை குலைப்பதற்கு இன்று பல தீய சக்திகள் செயற்படுவதால் தமிழர்களும், முஸ்லிம்களும் இது குறித்து விழிப்பாக இருக்க வேண்டும் எனவும் பொதுக்குழு வேண்டுகோள் விடுக்கின்றது.

### 6 - வது திருத்தம் நீங்க வேண்டும்

3. அரசியல் அமைப்பின் ஆறாவது திருத்தம் எமது மக்களின் அடிப்படை அரசியல் உரிமைகளை மீறுவதாலும் ஜனநாயக அரசியல் மரபுகளுச்கு முரணானதாலும் இந்த சட்ட திருத்தப் நீக்கப்படவேண்டும் என பொதுச் சபை தீர்மானித்திருக்கின்றது.

(6ஆம் பக்கம் பார்க்க)

# பேடன் பவல் தினத்தில் யாழ் மாவட்ட சாரணர் போட்டி

## வெற்றியீட்டியோர் விபரம்

(உரும்பிராய்)

யாழ். மாவட்ட சாரணர்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் சாரணிய இயக்கத்தின் தந்தை பேடன்பவல் பிரபுவின் 133 ஆவது நினைவு தினத்தைக் கொண்டாடினர் சாரண இயக்கம் சம்பந்தமான கனிஷ்டபிரிவு, சிரேஷ்ட பிரிவு, குருளைச் சாரணர் பிரிவு, சிரேஷ்ட பிரிவுகளுக்கிடையே பேச்சுப் போட்டி, பாடல் போட்டி, தனியாகவும், குழுவாகவும் நடைபெற்றது. கட்டுரை எழுதும் போட்டி இரண்டு பிரிவு சிரேஷ்ட சாரணர்கட்கும், கனிஷ்ட சாரணர்கட்கும் நடைபெற்றது. வினாடி வினாப் போட்டியும் நடைபெற்றது. இப் போட்டிகளில் தெரிவானோர் விபரம்.

### பேச்சுப் போட்டி

குருளைச் சாரணர் குழு: முதலாவது இடத்தைச் செல்வன் பி. கேதீசன், யாழ். மத்திய கல்லூரி, இரண்டாவது இடம் செல்வன் எம். ஆர். வெஸ்லி பிரசாத், யாழ். மத்திய கல்லூரி, மூன்றாம் இடம் செல்வன் அ. சதீஸ்குமார் வேலணை சைவப் பிரகாச வித்தியாசாலையும் பெற்றுக் கொண்டனர்.

கனிஷ்ட சாரணர் குழு: முதலாவது இடம் செல்வன் ரீ. நடனசபேசன், யாழ். மத்திய கல்லூரி, இரண்டாவது இடம் செல்வன் எம். எஸ். எஸ். சவுரிமுத்து யாழ். சம்பத்திரிசியார் கல்லூரி, மூன்றாம் இடம் செல்வன் ப. பார்த்திபன், யாழ். மத்திய கல்லூரி சாரணர்களும் பெற்றுக் கொண்டனர்.

சிரேஷ்ட சாரணர் குழு: முதலாவது இடம் செல்வன் எஸ். கேசவன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, இரண்டாம் இடம் செல்வன் எஸ். ஜே. ஜெயராம் யாழ். பரியோவான் கல்லூரி, மூன்றாம் இடம் எஸ். செல்வகுமார் கொக்குவில் இந்துக் கல்லூரி சாரணர்களும் பெற்றுக் கொண்டனர்.

திரிசாரணர் குழு: முதலாவது இடம் செல்வன் சி. சதீஸ் வரராஜா, இரண்டாவது இடம் எப். இவான் இந்திக்கான், மூன்றாம் இடம் செல்வன் பி. சுரேஷ் இவர்கள் மூவரும் யாழ். மாவட்டதிரி சாரணர்குழுவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பாட்டுப் போட்டி முடிவுகள்

குழுப்பாடல் குருளைச் சாரணர் பிரிவில் முதலாவது, இடம் யாழ். மத்திய கல்லூரி திரி சாரணர் பிரிவில் முதலாவது இடம் யாழ். மாவட்ட திரிசாரணர் குழு சாரணர்பிரிவில் முதலாவது இடம் யாழ். மத்திய கல்லூரி இரண்டாவது இடம் யா/சரம்பொன் சண்முகநாத மகா வித்தியாலயம், மூன்றாவது இடம் யாழ். கொக்குவில் இந்துக் கல்லூரி ஆகியன பெற்றுக்கொண்டன

### தனிப்பாடல் போட்டி

கனிஷ்ட சாரணர் பிரிவு முதலாவது இடம் செல்வன் ஆர். திலீபன் யா. மத்திய கல்லூரி, இரண்டாவது இடம் செல்வன் எஸ். நந்தசேகரம் கொக்குவில் இந்துக்கல்லூரி, 3வது இடம் செல்வன் ஜி. பி. எஸ். சவிரிமுத்து யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி ஆகியோர் பெற்றுக்கொண்டனர்.

சிரேஷ்ட சாரணர் பிரிவு முதலாவது இடம் செல்வன் இ. க. ஜானனன் யாழ் கரம்பொன் சண்முகநாத வித்தியாலயம், இரண்டாம் இடத்தை செல்வன் க. குகேந்திரன் யா. கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், மூன்றாம் இடத்தை செல்வன் லொ, பி. சதீஸ் யாழ். சம்பத்திரிசியார் கல்லூரியைச் சேர்ந்தவர்கள் பெற்றுக்கொண்டனர்.

### வினாடிவினாப்போட்டியில்

முதலாவது இடம்: யாழ். பரியோவான் கல்லூரி சாரணர் குழு இரண்டாம் இடம்: கொக்குவில் இந்துக் கல்லூரி சாரணர்குழு மூன்றாம் இடம் யாழ் சம்பத்தரிசியார் கல்லூரி சாரணர் குழு.

### கட்டுரைப் போட்டி

சிரேஷ்ட சரணர் பிரிவில் முதலாவது இடம் செல்வன் சி. முகுந்தன் யா. பரியோவான் கல்லூரி, இரண்டாம் இடம் செல்வன் க. குகேந்திரன் யா கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம், மூன்றாம் இடம் செல்வன் து. திவாகரன் யாழ். மத்திய கல்லூரி சாரணராவார்கள்.

கனிஷ்ட சாரணர் பிரிவில் முதலாவது இடம் செல்வன் ம. திவாகரன் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி இரண்டாவது இடம் செல்வன் வை. மயூரன் கொக்குவில் இந்துக் கல்லூரி, மூன்றாம் இடம் செல்வன் கே. இராகுலன் யா. சம்பத்தரிசியார் கல்லூரி சாரணர்கள் பெற்றுள்ளனர்.

இவ்விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட கொக்குவில் இந்துக் கல்லூரி அதிபர் திரு அ. பஞ்சலிங்கம் போட்டிகளில் வெற்றியீட்டிய சாரணர்கட்கு சான்றிதழ்கள் வழங்கினார்.

# எமது போராட்டத்தில் மாணவர் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும்

- சிற்றம்பலம்

(யாழ்ப்பாணம்)

எமது போராட்டத்திலும் விடுதலையிலும் மாணவர்கள் தம்மை இணைத்துக்கொள்ள வேண்டும். மாணவர்கள் பல்வேறு வழிகளில் போராட்டத்துடன் தம்மை ஈடுபடுத்திக் கொள்ளலாம். சிறுபான்மையினர்மீது முதலாளித்துவத்தின் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராட வேண்டும்.

நேற்று முன்தினம் யாழ். பல்கலைக் கழக கைலாசபதி அரங்கில் நடைபெற்ற கலாநிதி வி. நித்தியானந்தன் எழுதிய, 'இலங்கை அரசியல் பொருளாதாரம், 1948 - 1956 வர்க்க இனத்துவ நிலைப் பாடுகள்' என்ற நூல் வெளியீட்டு விழாவின்போது கலந்து கொண்டு உரையாற்றிய கலாநிதி சிற்றம்பலம் அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சுயமொழிக் கல்வி அறிமுகமாகிப் பலகாலமாகிவிட்டது. எமது சொந்த மொழியான தமிழ் மொழியில் நூலாசிரியர் இந்நூலை வெளியிட்டதற்காக எமது பல்கலைக்கழகம் பெருமைப்பட வேண்டும்,

இப்படியான வரலாற்று நூல்கள் தமிழ் மொழியில் வெளிவருவது அபூர்வம். இதை எழுதியுள்ள நூலாசிரியரைப் பாராட்ட வேண்டும்.

ஆங்கிலம் உயர்ந்தது. தமிழ் தாழ்ந்தது என்கிற தாழ்மையுர்ணவுஎங்களிடையே நிறைய உண்டு. கடந்த நான்கு சகாப்த காலமாக இந்த உணர்வு எம்மில் வேரூன்றியுள்ளது. இது பிழையான எண்ணமாகும். என்றே கூறவேண்டும் என்று குறிப்பிட்டார்.

நாம் ஒவ்வொருவரும் இலங்கை வரலாற்றைப் படித்துப் பார்க்க வேண்டும். அப்போதுதான் இந்த 20ஆம் நூற்றாண்டில் நம் நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் குளறுபடிகளைக் கண்டுபிடிக்கலாம்.

வரிவிளம்பரம்

விற்பனைக்கு

றோனியோ

தரமான றோனியோ பிரதிகளை தாமதமின்றி பெற்றுக் கொள்ள நம்பிக்கை நிறுவனம் ''கிளீன் கட்''

அப்பளம் தயாரிபாளர்களுக்கு ஏற்ற வகையில் தயாரிக்கபபட்ட 'உழுந்து மா' கிலோ 22/- படி பெற்றுக் கொள்ளலாம். M. G. M., No. 777 K. K. S Rd, Jaffna.

## யாழ்நகரில் இன்றைய சினிமா

69 வது நாளாக!!
நியூ சாந்தி (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
'சூப்பர் ஸ்ரார்'
ரஜனி - அமலா நடித்த
**கொடி பறக்குது**
(கலர்)

7 வது வாரம்
மனோகரா - (யாழ்)
தினசரி 10.30, 2.30, 6.30
ரஜனி, அமலா நடித்த
**மனிதன்**
(கலர்)

ஜனத்திரள் காட்சிகள்
ஹரன் யாழ்.
10-30 2-30 6-30
கமலஹாசன்
சரண்யா நடித்த
**நாயகன்**
(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா
**பூ- பூவா பூத்திருக்கு**
(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா
**ராஜாதி ராஜா**
(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)

## நியூசிலாந்து வெற்றி

(வெலிங்டன்)

கெனடிலில் நியூசலாந்திற்கும் இந்தியாவித்கும் இடையில் நடந்த சர்வதேச ஒரு நாள் போட்டில் 108 ஓட்டங்களினால் நியூசிலாந்து வெற்றியீட்டியது. முதலில் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 47 ஓவர்களில் 246 ஓட்டங்களைப் பெற்றது. மாட்டீன் குறோ 104 ஓட்டங்களைப் பெற்றார். இதற்குப் பதிலளித்த இந்தியா சகல விக்கட்டிக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இந்தியா அணியில் டபிள்யூ வீ. ராமன் பெற்ற 32 ஓட்டங்களே அதிகூடிய எண்ணிக்கையாகும்.

மூன்று நாடுகளுக்கிடையிலான இச்சுற்று போட்டியில் எதிர்வரும் சனிக்கிழமை அவுஸ்திரேலியாவும் இந்தியாவும் விளையாடுகின்றன.

## செங்குந்த இந்துக் கல்லூரியில் பேடன் பவல் தினம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு

## கலாமன்றக் கலை விழா

(விசேட நிருபர்)

''கூத்தாடுவதும் நெளிப்பதும் ஆத்தாதவன் செயல் என்னும் குறியீட்டுமொழி பண்டைக் காலந்தொட்டு தமிழ் மரபு வழக்கில் இருந்து வருமொன்றாகும்.''

யாழ். திருமறைக் கலாமன்றம் சமீபத்தில் எடுத்த மூன்று நாள் கலைவிழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்துப் பேசுகையில் பேராசிரியர் வண. நீ மரியசேவியர் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிடடார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் ''கூத்தாடுவது ஆற்றாதவனால் முடியாத ஒன்று. கூத்தாடிகள் என்பது ஒரு கேவலமான சொல்லல்ல. அது தெய்வீகக் கருத்தை வலியுறுத்தும் பதமாகவே கருதப்பட வேண்டும்'' என்றார்.

இறுதிநாள் நிகழ்ச்சியில் கலாமன்றத்தின் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கெடுத்த ''நீ ஒரு பாறை'' நாட்டுக்கூத்து இடம்பெற்

# ஆத்மீக உளவியல் கருத்தரங்கு

(விசேட நிருபர்)

''ஒவ்வொரு தலைவனும் தலைவியும் நேர்மை, கடமை பொறுமை, பிறர் அம்பு. விடா முயற்சி மனத்தைரியம் ஆகிய தலைமைத்துவ பண்புகளை பெற்றிருக்கவேண்டும்,

யாழ். புனித மரியன்னை பேராலய ''உருவாக்கல்இளைஞர் இயக்கம்'' ஆன்மீக உளவியல் கருத்தரங்கு ஒன்றை இரு நாட்கள் நடத்தினர்,

''தலைமைத்துவமும் உறவுகளும்'' என்னும் தலைப் திரு சந்திரகாந்தன் அடிகள் மேற்கண்டவிதம் சொன்னர்,

கருத்தரங்கு பங்குத் தந்தை அருட்திரு எஸ். எச். ஹிலறி ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

'' இளமைப் பருவமும் பாலியல் பிரச்சனையும் '' '' உளவியல் ஓர் அறிமுகம் பயன்பாடு, '' '' விடுதலை இறையியல், '' ''தலைமைத் துவமும் உறவுகளும்,'' ஆகிய தலைப்புகளில் குருவானவர்

ஹப்பி எலெக்ரிக்கல்ஸ்

Happy Electricals

எம்மிடம்

மின் உபகரணங்கள், சைக்கிள் உதிரிப்பாகங்கள் விற்பனைக்கு உண்டு.

ஒப்பந்தக்காரரும் விற்பனையாளரும்

ஹப்பி எலெக்றிக்கல்ஸ்

கே. கே. எஸ். வீதி, சுன்னாகம்.

B.125

கமலஹாசன்
சரண்யா நடித்த

**நாயகன்**

(கலர்)

லிடோ (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
★ பிரபு ★ சரிதா

**பூ- பூவா பூத்திருக்கு**

(கலர்)

ராஜா (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
ரஜனி (இரு வேடம்)
ராதா, நதியா

**ராஜாதி ராஜா**

(கலர்)

12ஆவது வாரம்
வெலிங்டன் (யாழ்)
தினசரி
10. 30, 2. 30 6. 30
★ கார்த்திக் ★ குஷ்பு

**வருஷம் 16**

(கலர்)

ஸ்ரீதர் (யாழ்)
10. 30, 2. 30, 6. 30
கமலஹாசன் -- சுஜாதா

**அவள் ஒரு தொடர்கதை**

ளைப் பெற்றார். இதற்குப் பதிலளித்த இந்தியா சகல விக்கட்டிக்களையும் இழந்து 133 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. இந்தியா அணியில் டபிள்யூ வீ. ராமன் பெற்ற 32 ஓட்டங்களே அதிகூடிய எண்ணிக்கையாகும்.

மூன்று நாடுகளுக்கிடையிலான இச்சுற்று போட்டியில் எதிர்வரும் சனிக்கிழமை அவுஸ்திரேலியாவும் இந்தியாவும் விளையாடுகின்றன.

## செங்குந்த இந்துக் கல்லூரியில் பேடன் பவல் தினம்

(யாழ்ப்பாணம்)

திருநெல்வேலி கிழக்கு செங்குந்த இந்துக் கல்லூரியின் பேடன் பவல் தினவிழா கல்லூரி அதிபர் திரு. மு. பரமேஸ்வரன் தலைமையில் கடந்த செவ்வாய்க் கிழமை நடந்தது.

சாரண ஆசிரியர் திரு. சி. அமரேசன் சிறப்புரை வழங்கினார். மற்றும் கல்லூரிச் சாரணர்களின் கலை நிகழ்ச்சிகளும் நாடகங்களும் மேடையேற்றங்ப்பட்டன. செயலாளர் செல்வன் சி. பத்மராஜா நன்றி கூறினார்.

பண்டைக் காலந்தொட்டு தமிழ் மரபு வழக்கில் இருந்து வருமொன்றாகும்.''

யாழ். திருமறைக் கலாமன்றம் சமீபத்தில் எடுத்த மூன்று நாள் கலைவிழாவின் இறுதி நாள் நிகழ்ச்சிக்கு தலைமை வகித்துப் பேசுகையில் பேராசிரியர் வண. நீ மரியசேவியர் அடிகளார் மேற்கண்டவாறு குறிப்பிடடார்.

தொடர்ந்து அவர் பேசுகையில் ''கூத்தாடுவது ஆற்றாதவனால் முடியாத ஒன்று. கூத்தாடிகள் என்பது ஒரு கேவலமான சொல்லல்ல. அது தெய்வீகக் கருத்தை வலியுறுத்தும் பதமாகவே கருதப் பட வேண்டும்'' என்றார்.

இறுதிநாள் நிகழ்ச்சியில் கலா மன்றத்தின் இருபத்தைந்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்கெடுத்த ''நீ ஒரு பாறை'' நாட்டுக் கூத்து இடம்பெற்றது. (21)

# ஆத்மீக உளவியல் கருத்தரங்கு

(விசேட நிருபர்)

''ஒவ்வொரு தலைவனும் தலைவியும் நேர்மை, கடமை பொறுமை, பிறர் அம்பு. விடா முயற்சி மனத்தைரியம் ஆகிய தலைமைத்துவ பண்புகளை பெற்றிருக்கவேண்டும்,

யாழ். புனித மரியன்னை பேராலய ''உருவாக்கல்இளைஞர் இயக்கம்'' ஆன்மீக உளவியல் கருத்தரங்கு ஒன்றை இரு நாட்கள் நடத்தினர்,

''தலைமைத்துவமும் உறவுகளும்'' என்னும் தலைப்பில் கருத்துரைத்த அருட் திரு சந்திரகாந்தன் அடிகள் மேற்கண்டவிதம் சொன்னார்,

கருத்தரங்கு பங்குத் தந்தை அருட்திரு எஸ். எச். ஹிலறி ஜெபநேசன் தலைமையில் நடைபெற்றது.

'' இளமைப் பருவமும் பாலியல் பிரச்சனையும் '' '' உளவியல் ஓர் அறிமுகம் பயன்பாடு, '' '' விடுதலை இறையியல், '' ''தலைமைத் துவமும் உறவுகளும்,'' ஆகிய தலைப்புகளில் குருவானவர்கள் கருத்துரை வளங்கினார்

அருட்திரு அன்ரனிபாலா அருட்திரு. ஞா. எட்மன் மைக்கல், அருட்திரு. கிருபானந்தன்,, அருட்திரு. இராயப்பு, அருட்திரு. என். டேமியன் அடிகளார்களும் பல் கலைக்கழக மருத்துவ பீட மாணவன் ரி. மல்கம் ஆகியோர் கருத்தரங்கில் பங்கெடுத்தனர்.

அருட்திரு சந்திரகாந்தன் அடிகள் தொடர்ந்து பேசுகையில் ''இன்றைய இளைஞர்கள் நாளைய தலைவர்கள் என்பதை ஒருநாளும் ஏற்க முடியாது ஏனெனில் அவர்கள் இன்றைய தலைவர்களாகவே திகழ்கின்றார்.

செல்வி புலோரினா எமிலின் நன்றி கூறினார்.

## தேவரையாளி இந்துக்கல்லூரி மெய்வல்லுனர் போட்டிகள்

(கரவெட்டி)

தேவரையாளி இந்துக்கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுனர் போட்டிகள் கல்லூரி அதிபர் திரு.ஏ. இரத்தினசபாபதி தலைமையில் வெகுவிமரிசையாக நடைபெற்றது.

இப்போட்டியில் பிரதம விருந்தினராக வடமராட்சிக் கல்வி அதிகாரி திரு.பி.வீரபத்திரன் அவர்களும், சிறப்பு விருந்தினராக தொழில்கல்வி அதிகாரி எஸ்.சுப்பிரமணியம், கல்வி அதிகாரி .திரு .எஸ்.சிவராசா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

இப்போட்டியில் பாரதி இல்லம முதலாம் இடத்தையும், வள்ளுவன் இல்லம் இரண்டாம் இடத்தையும், காந்தியில்லம் முன்றாம் இடத்தையும் பெற்றது.

வெற்றி பெற்ற மாணவர்களுக்கும் இல்லங்களுக்கும் தொழில் கல்வி அதிகாரி திரு. எஸ். சுப்பிரமணியம் அவர்கள் பரிசில்களை வழங்கினார். பாடசாலை விளையாட்டுத்துறை ஆசிரியர் திரு. எஸ். கிருஷ்ணகாந்தன் நன்றி நவின்றார். (18)

## கடத்தப்பட்ட ஆசிரியர்

(திருகோணமலை)

கடந்த 27 ஆம் திகதி அன்று காலை சம்பூர் மகாவித்தியாலயத்தில் கல்விகற்பிக்கின்ற பட்டதாரி ஆசிரியரான திரு' யோகானந்தம் என்பவர் ஈ. .பி ஆர். எல். எவ் உறுப்பினர்களால் கடத்திச் செல்லப்பட்டு, மிகவும் மோசமானமுறையில் தாக்கப்பட்டு 2 மணிக்கு விடுதலை செய்யப் பட்டார். தற்பொழுது ஆசிரியர் மூதூர் வைத்தியசாயில் சிகிச்சை பெற்று வருகிறர்ா.


**ஹப்பி எலெக்றிக்கல்ஸ்**

கே. கே. எஸ். வீதி, சுண்ணாகம்.
B.125

கோவில்களுக்குத் தேவையான

பூசைமணி, பெரியமணி, கிடாரம், திருவாசி, குத்துவிளக்கு, ஸ்தூபி, கும்பத்திற்குரிய செம்பு வகைகள், சருவம், குடம், தீபம், தூபம் எவர்சில்வர், பித்தளை, செம்பு அலுமினியப் பொருட்கள் முதலியன

எம்மிடம் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

**சாமி அன் சன்ஸ்**

**எவர்சில்வர் அன் பென்ஸி குட்ஸ்**

313, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
(B/127)

வீரம் விளைகின்ற வியத்தகு நம்பூமியிலே சீர்சேர் விடுதலையின் சிங்கார நாதமென
பாரெங்கும் ஒலிக்கவரும் ஈழநாதம்வாழியவே....

முன்னணி
இசை, தொலைக்காட்டி, வீடியோ விற்பன்னர்கள்,
மின் தொழில் நுட்பவியலாளர்கள்

**வி[illegible] அன் சன்ஸ்** (விக்ரேஸ்)

**100, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.**

# தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு தொல்லை கொடுக்கும் றோ

## கருணாநிதியின் சமாதான திட்டத்தில் ஏற்பட்ட தடங்கல்களுக்கும் றோவே காரணம்

இந்தியப் புலனாய்வுத் துறையான ''றோ'' தற்பொழுது மத்திய ஆட்சியில் இருக்கும் தேசிய முன்னணி அரசாங்கத்திற்கு எதிராக வேலை செய்ததாகவும். தடைக்கல்லாக நிற்பதாகவும் இந்தியாவில் இருந்து வெளிவரும் ஸ்ரேட்மன் பத்திரிகையில் கடந்த திங்கட்கிழமை வெளிவந்த விசேட கட்டுரை குற்றம் சாட்டுகிறது.

அக் கட்டுரையில் தேசிய முன்னணி அரசாங்கம் இலங்கை இனப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு எடுத்து வரும் நடவடிக்கைகளுக்கு ''றோ'' முட்டுக்கட்டை போடுகின்றது. எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது. தற்பொழுது இலங்கையில் ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ். ஆகிய இயக்கங்களை றோவே வழி நடத்துவதாகவும் அவர்களின் சொல்லின்படியே இக் குழுக்கள் இயங்குவதாகவும் கட்டுரை தெரிவிக்கின்றது. அண்மையில் கருணாநிதியின் பேச்சுவார்த்தைகளில் முட்டுக்கட்டை ஏற்படுவதற்கும் ''றோ'' வின் நடவடிக்கைகளே காரணம் என்றும் கருதப்படுவதாகக் கட்டுரை தெரிவிக்கின்றது.

மேலும் கடந்த மாதம் தமிழ் நாட்டுக்கரையில் ஆயுதங்கள் கொண்டு சென்று புதைக்கப்பட்டதும் அதற்கு றோவே காரணம் என முதல்வர் கருணாநிதி குற்றம் சாட்டியதும் குறிப்பிடத்தக்கது. அத்தோடு காஸ்மீரில் அண்மையில் வன்முறைகள் பெருகுவதற்கு முஸ்லீம்கள் மீதான தாக்குதலை றோவே தொடக்கியதாகக் குற்றச்சாட்டுகள் இருப்பதும் குறிப்பிடத்தக்கது. 1977.ஆம் ஆண்டு அமைக்கப்பட்ட ஜனதா அரசாங்கத்தின் கவிழ்ப்பிற்கு இந்திரா காந்திக்கு றோ உதவியதாகவும் குற்றச் சாட்டுக்கள் உள்ளன என்பதும கவனத்திற்கொள்ளத்தக்கது.

## பாண்டிச்சேரியில் தி. மு. க கூட்டணி பலமற்ற ஆட்சி

(பாண்டிச்சேரி)

பாண்டிச்சேரி சட்டசபைக்கான செவ்வாய்க்கிழமை நடைபெற்ற தேர்தலில் தி. மு. க ஜனதாதள் மாக்சிய கம்யூனிஸ்ட் கூட்டணி 15 இடங்களையும் அ. தி. மு. க கூட்டணி 14 இடங்களையும் சுயேற்சை 1 இடத்தையும்பெற்றுள்ளன. மொத்தமுள்ள 30 தொகுதிகளில் தமது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிப்பதற்கும் சுயேற்சை வேட்பாளரின் ஆதரவு தி. மு. க கூட்டணிக்கு அவசியமாக உள்ளது.

இப் பாண்டிச்சேரி யூனியன் பிரதேசத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி தனிப்பெரும் கட்சியாக 11 இடங்களைப் பெற்றிருப்பதும் அடுத்ததாக தி. மு. க 9 இடங்களையும் பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

அதேவேளை தமிழ் நாட்டில் பழனி லோக்சபாத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட கவுண்டர் வெற்றிபெற்றார்.

## இரு றோ அதிகாரிகள் கொலை

(ஸ்ரீநகர்)

இந்திய அரசின் புலனாய்வுத்துறைக்கு வேவு பார்க்கும் இருவரைத் தாம் சுட்டுக் கொன்றுள்ளதாக, கஸ்மீரின் சுதந்திரத்துக்காகப் போராடும் முஸ்லிம் தீவிரவாதிகள் செய்வாய்க்கிழமை அறிவித்துள்ளனர்.

கொலையுண்ட இருவரும் இந்திய புலனாய்வு நிறுவனமான 'றோ' வின் கையாட்கள் என ஜம்மு - கஸ்மீர் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

## சோவியத் குழுவுக்கு வரவேற்பு

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள சோவியத் நாட்டின் பாரதி ஆய்வாளர்களும் கவிஞர்களுமான அனரொலி பார்பரா வியாசெஸ்லாங் குப்றியானோவ் ஆகியோரைக் கௌரவிக்குமுகமாக இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் சார்பாக தேநீர் உபசரணை வைபவமொன்று எதிர் வரும் வெள்ளிக்கிழமை பி. ப. 4 00 மணிக்கு கொம்பனித் தெரு வொக்ஹோல் வீதியிலுள்ள இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவார்.

## பல்கலைக்கழகங்களும் முழுமையாக இயங்குகின்றன

(கொழும்பு)

இலங்கையில் ஏழு பல்கலைக்கழகங்கள் முழுமையாக இயங்குகின்றனவாம். எட்டாவது பல்கலைக்கழகமானகிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளது.

கழக ஆசிரியர் வரவு 95% க்கு அதிகமாகவும் இருப்பதாகத் தெரிய வருகிறது. றுகுணு - மாத்றறைப் பல்கலைக்கழகத்திலும் றுகுணு - காலி பல்கலைக் கழகத்திலும் மாணவர் வரவு முறையே 45% மாகவும் 60%மாகவும் உள்ளதாம்.

யாழ். பல்கலைக் கழகத்

## கைத் துப்பாக்கி கைப்பற்றப்பட்டது

(பசறை)

கைத்துப்பாக்கி ஒன்றை நெத்தலிக் கருவாட்டுப் பெட்டியில் மறைத்து வைத்திருந்த ஒருவர் பசறைப் பொலிசாரிடம் கையும் மெய்யுமாகப் பிடிபட்டுள்ளார்.

பசறைப் பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள சோதனை நிலையத்தில் கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் நெத்தலிப் பெட்டியைச் சோதித்த சமயம் 56 கைத்துப்பாக்கி ரவைகளையும் கைத்துப்பாக்கியையும் கண்டெடுத்துள்ளனர்.

பசறைப் பொலிஸார் மேற்கொண்ட இன்னுமொரு தேடுதல் வேட்டையில் ஜே. வி. பியினர் பதுங்கிடம் ஒன்றில் சீருடைகள், வெடி மருந்து, செம்புக் கம்பிகள், சப்பாத்துகள், உள்ளூர்த் தயாரிப்புத் துப்பாக்கிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

## புதிய நிர்வாகிகள் தெரிவு

புத்தூர், புத்தகலட்டி லிங்கன் வீதியில் அமைந்துள்ள லிங்கன் மத்திய சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபையினர் தெரிவானது அண்மையில் நடைபெற்றது, அவர்களது விபரங்கள் வருமாறு:-

காப்பாளர்கள்- திரு. பெ. தர்பிராசா, திரு. நா. சிவ

# தேர்தல் வன்முறையில் 90 பேருக்குமேல் கொலை 706 இடங்களில் மறுவாக்குப்பதிவிற்கு உத்தரவு



(புதுடில்லி)

இந்தியாவில் ஏழு மாநிலங்களில் நடந்த தேர்தல் சண்டையில் 90 க்கும் அதிகமானோர் இறந்துள்ளதாக இந்திய செய்தி ஸ்நாபனங்கள் தெரிவிக்கின்றன.

தேர்தல் நடந்த மற்ற ஏழு மாநிலங்களிலும் வன்செயல்கள் பரவலாக இடம்பெற்றதாகத் தெரிய வருகிறது. ஹிந்தி பேசும் பீஹார் மாநிலத்தில்தான் வன்செயல்கள் பாரியளவில் நடந்துள்ளதாம்.

இத்தேர்தல்கள் மூன்றுமாத கால வி. பி. சிங்கின் செல்வாக்கை மதிப்பிடுவதற்கும், ராஜீவ் காந்தியின் எதிர்கால அரசியலை நிர்ணயிப்பதற்குமான ஒரு களமாக அமைந்துள்ளது.

பெரும்பாலும் தேர்தல் நடந்த எல்லா மாநிலங்களிலும், யூனியன் பிரதேசத்திலும் காங்கிரஸ் கட்சி தோல்வியைத்தழுவலாம் என வெளிவந்து கொண்டிருக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன. அதேநேரத்தில் அரசியல் வன்முறைகள் மலிந்த பீஹார் மாநிலத்தில் இத் தேர்தலிலும் பெரும் வன்முறைகள் இடம் பெற்றுள்ளன. இறந்தவர்களில் 70 பேருக்கும் மேற்பட்டோர் பீஹார் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள் ஆகும். தேர்தல் வன்முறையால் மறுவாக்குப் பதிவிற்கு உத்தரவிடப்பட்ட 706 நிலையங்களில் 602 நிலையங்கள் பீஹார் மாநிலத்தில் உள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

அடுத்ததாக தேர்தல் வன்முறைகள் ஹரியானா மாநிலத்திலும் இடம்பெற்றுள்ளன. முதலமைச்சர் போட்டியிட்ட தொகுதியிலும் வன்முறைகள் இடம் பெற்றுள்ளது. பொலிசாரே வன்முறையைத்தூண்டிவிட்டதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. தற்பொழுது ஹரியானா மாநிலத்தின் முதன் மந்திரி இந்தியாவின் துணைப் பிரதம மந்திரி தேவிலாலின் மகன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மலதிகமாக ஆயிரக்கணக்கான பாதுகாப்புப் படையி



னரை அரசாங்கம் பீஹரில் குவித்திருந்தது ஆனால் வாக்குச் சாவடிகளில் நடந்த சண்டைகளை பாதுகாப்புப்படையினரால் தடுத்து நிறுத்த முடியவில்லை.

வாக்குச் சாவடிகளில் நான் முந்தி நீமுந்தி' என்று வாக்குச்சீட்டுக்களைக் கட்சிகளின் ஆதரவாளர் திணிக்க முயன்றது பீஹாரின் தலைநகரான பட்னாவில் ஏற்பட்ட மோதல்களுக்குக் காரணமாம்.

கள்ள வாக்குகளை வாக்குப் பெட்டிகளில் போட முயன்ற சமயம் கட்சி ஆதரவாளர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் பொலிஸ் துப்பாக்கி பிரயோகம் செய்ததால் பலர் இறந்துள்ளதாகத் தெரியவருகிறது.

## விபத்தில் முதியவர் காயம்

(விசேடநிருபர்)

'சாலி' யில் இரு பிள்ளைகளை ஏற்றிவந்த பெண்ணொருவர் வீதியோரத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்தவரை மோதியதில் அவர் காலிலும், கையிலும் காயங்களுக்கு உள்ளானார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை எட்டேகால் மணிக்கு யாழ் கே. கே. எஸ் வீதியில் மதவடிக்கு சமீபமாக நடைபெற்றது.

பூநாடி மரத்தடியில் கம்மாலை வைத்திருக்கும் ஓட்டுமடத்தைச் சேர்ந்த எஸ். காளிதாஸ் (வயது 60) என்பவரே மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவராவார்.

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த 'லொறி' ஒன்றுக்கு நேரே சென்றதால் திடீரென்று நிறுத்தப்பட்டதும் இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

## ஜே. வி. பி.

## இயங்காத ச.ச. நிலையங்களின் நிதி உதவி நிறுத்தப்படும்

(விசேட நிருபர்)

பல சனசமூக நிலையங்கள் காலநிலமைகளைச் சாட்டாக்கிப் பூட்டிக் கிடக்கின்றன. இந்நிலமை இனிமேலும் நீடிக்காமல் உரிய நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் சமீபத்தில் நடைபெற்ற சனசமூக நிலையங்களின் சமாசக் கூட்டத்தில் கலந்துரை ஆற்றிய சனசமூக நிலைய மேற்பார் வயாளர் திரு. லோகசிவம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாசத்தலைவர் திரு.கோ. தியாகராசா வைபவத்திற்கு தலைமை வகித்தார். திரு. லோகசிவம் தொடர்ந்து குறிப்பிட்டதாவது.

''சனசமூக நிலையத்தலைசபை நிர்வாகத்தில் தலைமைத்துவம் பெற வாய்ப்பு இருப்பதால் அவர்கள் அங்கம் வகிக்கும் சனசமூக நிலையங்களின் சமாசம் பலம் வாய்ந்த அமைப்பாக விளங்குகிறது'' என்றார்.

பிரதேசஉள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பாஸ்கரன் பேசுகையில் இயங்காமல் இருக்கின்ற சனசமூக நிலையங்களை சுட்டிக் காட்டினால் அவற்றுக்கு வழங்கப்பட்டு வருகின்ற அரச நன்கொடையை நிறுத்தி நன்றாக இயங்கி வருகின்ற சனசமூக நிலையங்களுக்கு வழங்க ஆவன எடுக்கப்படும்'' என்று

## கொள்ளையடிக்க

வாதிகள் செய்வாய்க்கிழமை அறிவித்துள்ளனர்.

கொலையுண்ட இருவரும் இந்திய புலனாய்வு நிறுவனமான 'றோ' வின் கையாட்கள் என ஜம்மு - கஸ்மீர் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

...தக்கது.

அதேவேளை தமிழ் நாட்டில் பழனி லோக்சபாத் தொகுதிக்கான இடைத் தேர்தலில் காங்கிரஸ் கட்சி வெற்றி பெற்றுள்ளது. காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட கவுண்டர் வெற்றிபெற்றார்.

# பல்கலைக்கழகங்களும் முழுமையாக இயங்குகின்றன

(கொழும்பு)

இலங்கையில் ஏழு பல்கலைக்கழகங்கள் முழுமையாக இயங்குகின்றனவாம். எட்டாவது பல்கலைக்கழகமானகிழக்கிலங்கைப் பல்கலைக் கழகம் விடுமுறைக்காக மூடப்பட்டுள்ளது.

எல்லாப் பல்கலைக் கழகங்களிலும் மாணவர் வரவு 87% க்கு அதிகமாகவும், பல்கலைக்கழக ஆசிரியர் வரவு 95% க்கு அதிகமாகவும் இருப்பதாகத் தெரிய வருகிறது. றுகுணு - மாத்றறைப் பல்கலைக்கழகத்திலும் றுகுணு - காலி பல்கலைக் கழகத்திலும் மாணவர் வரவு முறையே 45% மாகவும் 60%மாகவும் உள்ளதாம்.

யாழ். பல்கலைக் கழகத்தில் மாணவர் வரவு 90%மும், ஆசிரியர் வரவு 95% மும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

# யாழ் மாணவர் கவலை

(சுழிபுரம்)

மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தில் மீண்டும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதைத் தொடர்ந்து அங்கு கல்விபயிலும் சட்டிடப் பொறியல (தவாரிட்டி சேவைங்) துறைமாணவர்களுக்கான போதனை 27/2/90 முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக நிர்வாகம் அறிவித்துள்ளது-இவ்வாறு இங்கு கல்விபயிலும் யாழ்ப்பாண மாணவர்களில் பலருக்கும் இவ் வகுப்புக்களின் ஆரம்பம் பற்றிய தகவல் இன்னும் கிடைக்கவில்லை என்று இங்கு கல்வி பயிலும் மாணவர் ஒருவர் கவலை தெரிவித்தார்.

(17)

# மீன்பிடி முறையில் கருத்து வேறுபாடு விரைவில் தீர்வு

(சுதுமலை)

மடிவலை மீன்பிடித்தல் தொடர்பாக சாவல்காடு, அராலி, வட்டுக்கோட்டை, நாவாந்துறை மீனவர்களிடையே சச்சரவுகள் வளர்ந்து கொண்டு வருகின்றது. இந்த முறை மீன்பிடித்தலால் மீன், கணவாய், இறால் போன்ற இனங்களின் கருவூலகங்கள் என்பன அழிக்கப்பட்டு இந்த வர்க்கங்கள் குறைந்துவிடும் வாய்ப்பு இருப்பதாக ஏனைய முறைகளைக் கையாண்டு மீன் பிடிப்பவர்கள் கருதுகிறார்கள்.

ஆனால் மடிவலை முறையைக்கொண்டு மீன்பிடிப்பவர்கள்தாங்கள் சிறிய முதலீடுகளைக்கொண்டு மீன் பிடிப்பதாகவும் ஆனால் தங்கள்மீது சுமத்தப்படும் குற்றங்கள் ஆதாரமற்றவை என்றும் சொல்கிறார்கள். இந்தவிடயம் தமிழீழ விடுதலைப்புலிகளின் மானிப்பாய் பொறுப்பாளர் திரு. ராஜனின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ளது.

இதுபற்றி அவரிடம் கேட்டபோது. மீனவர் சங்கங்கள் விரைவில் புனருத்தாரணம் செய்யப்படவேண்டும். மீன்பிடித்துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகள், ஆய்வாளர்கள் ஆகியோர் சகிதம் மீன்பிடி சங்கங்களின் அங்கத்தவர்களும் அழைக்கப்பட்டு இந்த விடயம் சம்பந்தமான நன்மை தீமைகள் ஆராய்ந்து அதன் பின்னரே இதற்கொரு தீர்வைக் காணலாம் [illegible] றார். (19)

# இறைவனுக்கே முதலிடம்

சென்னையிலுள்ள 25 பாட[illegible] சாலைகள் பங்குபற்றிய [illegible] தங்க நிகழ்ச்சியில் யாழ்ப்[illegible]ணத்தைச் சேர்ந்த மாணவன் கே.ரி. இறைவனுக்கே போட்டியில் முதலிடம். இவர் யாழ். சென் ஜோன்ஸ் கல்லூரி பழைய மாணவனும் யாழ். பல்கலைக்கழக-இராமநாதன் நுண்கலைக் கழக மிருதங்க விரிவுரையாளர் சங்கீத ரத்தினம் எம். சிதம்பரநாதனின் மாணவனுமாகும். இவர் தற்போது சென்னையில் படித்துக் கொண்டிருக்கிறார்.

(கொழும்பு)

இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ள சோவியத் நாட்டின் பாரதி ஆய்வாளர்களும் கவிஞர்களுமான அனரொலி பார்பரா வியாசெஸ்லாங் குப்றியானோவ் ஆகியோரைக் கௌரவிக்குமுகமாக இந்து சமய கலாசார தமிழ் அலுவல்கள் இராஜாங்க அமைச்சின் சார்பாக தேநீர் உபசரணை வைபவமொன்று எதிர்வரும் வெள்ளிக்கிழமை பி.ப. 4.00 மணிக்கு கொம்பனித் தெரு வொக்ஹோல் வீதியிலுள்ள இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனக் கேட்போர் கூடத்தில் நடைபெறும். இராஜாங்க அமைச்சர் திரு. பி. பி. தேவராஜ் நிகழ்ச்சிக்குத் தலைமை தாங்குவார்.

# கொள்ளையடித்த சி.வி.எவ். புலிகளால் கைது

(திருகோணமலை)

மூதூர் புதிய இறங்கு துறை வீதியில் நேற்றுக் காலை 8.00 மணிக்கு இருபது ஆயிரம் ரூபா பெறுமதியானநகைகள் சி. வி. எவ். உறுப்பினர்களால் கொள்ளை அடிக்கப்பட்டன. கொள்ளையில் ஈடுபட்ட இவர்களை, 11 மணிக்கு இறால் குழியில் வைத்து தமிழீழ விடுதலைப் புலிகளினால் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் அவர்களது கடைசிக்கால கட்டத்தில் எப்படியான கொலை கொள்ளைகளில் ஈடுபட்டு வந்தார்களோ அதேபோல இப்போது திருகோணமலையில் ஈடுபட்டுள்ளனர்.

# ஆங்கில தட்டெழுத்தாளர்

(அராலி)

அரச தட்டெழுத்தாளர் சேவையில் ஆங்கிலம்இரண்டாம் வகுப்பு "ஆ" பிரிவுக்கு ஆட்களைச் சேர்ப்பதற்கான [illegible]போட்டிப்பரீட்சை வரும் மே [illegible] பன்னிரண்டாம் திகதி [illegible] பெறவுள்ளது விண்ணப் [illegible]வுத்திகதி மார்ச் மாதம் [illegible] வயதெல்லை பதி[illegible]க்கும் நாற்பதுக்கும் [illegible]ப்பட்டவர்கள்.

[illegible] சம்பந்தமான விபரங் [illegible] பெப்ரவரி எட்டாம் [illegible] வர்த்தமானியில் பிர[illegible]க்கப்பட்டுள்ளன.

# எமது அலுவலகத்தில் அடையாள அட்டை

சரசாலை மத்தி வாசியான சின்னப்பொடியன் தெய்வேந்திரன் என்பவரது அடையாள அட்டை ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது. உரியவர் வந்து பெற்றுக் கொள்ளவும்.

...சொண்ட இன்னுமொரு தேடுதல் வேட்டையில் ஜே.வி.பியினர் பதுங்கிடம் ஒன்றில் சீருடைகள், வெடிமருந்து, செம்புக் கம்பிகள், சப்பாத்துகள், உள்ளூர்த் தயாரிப்புத் துப்பாக்கிகள் ஆகியன கைப்பற்றப்பட்டன.

# புதிய நிர்வாகிகள் தெரிவு

புத்தூர், புத்தகலட்டி லிங்கன் வீதியில் அமைந்துள்ள லிங்கன் மத்திய சனசமூக நிலையத்தின் புதிய நிர்வாக சபையினர் தெரிவானது அண்மையில் நடைபெற்றது. அவர்களது விபரங்கள் வருமாறு:-

காப்பாளர்கள்- திரு. பெ. தர்பிராசா, திரு. நா. சிவஞானம், தலைவர்- திரு. வ. ஐயாத்துரை, உபதலைவர்- திரு. பெ. தம்பையா, செயளாளர்- திரு. இ. இராசையா, பொருளாளர்- செல்வன் மா. நவநீதம், எண்டார்வையாளர்- திரு. சி. லோகராஜா.

நிர்வாகக்குழு உறுப்பினர்களாக க. சந்திரசேகரம், சி. சந்திரசேகரம், வே. இராசு, ந. சின்னத்தம்பி, கி. ஈசன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

...கிளில் சென்று கொண்டிருந்தவரை மோதியதில் அவர் காலிலும், கையிலும் காயங்களுக்கு உள்ளானார்.

இச்சம்பவம் நேற்று வியாழக்கிழமை எட்டேகால் மணிக்கு யாழ் கே. கே. எஸ் வீதியில் மதவடிக்கு சமீபமாக நடைபெற்றது.

பூநாடி மரத்தடியில் கம்மாலை வைத்திருக்கும் ஓட்டுமடத்தைச் சேர்ந்த எஸ். காளிதாஸ் (வயது 60) என்பவரே மேற்படி சம்பவத்தில் காயமடைந்தவராவார்.

வீதியில் நிறுத்தப்பட்டிருந்த 'லொறி' ஒன்றுக்கு நேரே சென்றதால் திடீரென்று நிறுத்தப்பட்டதும் இந்த விபத்து ஏற்பட்டதாக கூறப்படுகிறது.

# ஜே. வி. பி. முக்கியஸ்தர் கொலை

(வவுனியா)

ஜே. வி. பி. இயக்கத்தின் முக்கியஸ்தர் எனக் கருதப்படும் ஒருவர் வவுனியா மாவட்டத்தில் செப்பட்டிக் சொல்லாவில் மோட்டார் சைக்கிலில் வந்த இனந்தெரியாத இருவரால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

# வவுனியா மாவட்டத்தில் மிளகாய்ச் செய்கை

(நெடுங்கேணி)

வவுனியா மாவட்டதில் மிளகாய்ச் செய்கை செய்ய வேண்டாமென விவசாயத் திணைக்களத்தினால் தடை செய்யப்பட்டுள்ளதாக வதந்தி பரவியுள்ளது. இது பொய்யானது என வவுனியா மாவட்ட விவசாயத் திணைக்களத்தினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு. அ. கிருஷ்ணர் வெளியிட்ட அறிக்கையில்,

மிளகாய்ச் செய்கை விவசாயிகட்கு அதிக வருமானத்தைக் கொடுக்கும் பணப்பயிராதலால், மிளகாய்ச் செய்கையை ஊக்குவிப்பதில் விவசாயத் திணைக்களம் மிகவும் அக்கறை கொண்டுள்ளது. விவசாயிகள் மிளகாய்ச் செய்கையை வெற்றிகரமாக மேற்கொள்வதற்குத் தேவையான தொழில் நுட்ப அலோசனைகளைப் பெறுவதற்கு விவசாய போதனாசிரியருடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன் என்று தெரிவித்துள்ளார்.

# புலமைப்பரிசில் பெற்ற மாணவர்கள்

(தீவுப்பகுதி)

இரு மாணவர்கள் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்துள்ளனர். இது பாராட்டப்படக் கூடிய ஒன்று. இப்பாடசாலையிம் கற்பிக்கும் ஆசிரியர்களின் முயற்சியே இவ்வெற்றிக்கு காரணமாகும். இவ்வாறு புங்குடுதீவு ஸ்ரீ கணேசா மகா வித்தியாலய மண்டபத்தில் நடைபெற்ற ஆசிரியர்களுக்கானகூட்டமொன்றில் உரையாற்றிய மேற்படி வித்தியாலய அதிபர் டாக்டர் கே.ரி. தர்மலிங்கம் குறிப்பிட்டார். புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர் செல்வன் கே.செந்தீபன் என்பவர் அகில இலங்கை ரீதியில் இருபதாவது இடத்தையும் செல்வி எம். லோஜி முன்னூற்றி தொண்ணூற்றோராவது இடத்தையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(15)

# நிதி உதவி நிறுத்தப்படும்

(விசேட நிருபர்)

பல சனசமூக நிலையங்கள் காலநிலமைகளைச் சாட்டாக்கிப் பூட்டிக் கிடக்கின்றன. இந்நிலைமை இனிமேலும் நீடிக்காமல் உரிய நிர்வாகங்கள் நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

யாழ் வேம்படி மகளிர் கல்லூரி மண்டபத்தில் சமீபத்தில் நடைபெற்ற சனசமூக நிலையங்களின் சமாசக் கூட்டத்தில் கலந்துரை ஆற்றிய சனசமூக நிலைய மேற்பார் வயாளர் திரு. லோகசிவம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சமாசத்தலைவர் திரு.கோ. தியாகராசா வைபவத்திற்கு தலைமை வகித்தார். திரு. லோகசிவம் தொடர்ந்து குறிப்பிட்டதாவது.

"சனசமூக நிலையத்தலைவர்கள் வர இருக்கும் மாகாணசபை நிர்வாகத்தில் தலைமைத்துவம் பெற வாய்ப்பு இருப்பதால் அவர்கள் அங்கம் வகிக்கும் சனசமூக நிலையங்களின் சமாசம் பலம் வாய்ந்த அமைப்பாக விளங்குகிறது" என்றார்.

பிரதேசஉள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலக சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி பாஸ்கரன் பேசுகையில் இயங்காமல் இருக்கின்ற சனசமூக நிலையங்களை சுட்டிக் காட்டினால் அவற்றுக்கு வழங்கப்பட்டு வருகின்ற அரச நன்கொடையை நிறுத்தி நன்றாக இயங்கி வருகின்ற சனசமூக நிலையங்களுக்கு வழங்க ஆவன எடுக்கப்படும்" என்று தெரிவித்தார். (21)

# ஆயுர் வேத மருத்துவக் கல்லூரி பரீட்சை முடிவுகள்

1989 டிசம்பர் மாதம் நடைபெற்ற ஆண்டிறுதிப் பரீட்சையில் சித்தி அடைந்தோர் விபரம்.

1ம் வருடம் முதற் பிரிவு

1) செல்வன் எஸ் தில்லைச்சிவம் 2) செல்வி எஸ். சிவானி

இரண்டாம் மேற்பிரிவு

1) செல்வன் எஸ்.சந்திரபாலன்
2) செல்வி எஸ். சுசந்தி
3) செல்வி சே. ஜெயவதனா
4) திருமதி எச் எம் அன்பிதா

சாதாரண சித்தி

1) செல்வன் எஸ். புண்ணியகுமாரன் 2) செல்வன் F. A மரியதாஸ் 3) செல்வி கே. குணதேவி

2ம் வருடம் முதற்பிரிவு

1) செல்வி அ. தேவரஞ்சனி
2) செல்வி தி. கலாநிதி

இரண்டாம் மேற்பிரிவு

1) செல்வன் ப. சத்தியநாதன்

இரண்டாம் கீழ்பிரிவு

1) செல்வி எஸ் லிங்கமலர்

சாதாரண சித்தி

1) செல்வன் கே. ஜீவானந்தம்
2) செல்வன் வே. சிவஜெயம்
3) செல்வி எஸ். உஷா

# வீதியில் விளக்கில்லை

(உரும்பிராய்)

உரும்பிராய் பிரதானவீதிகளான பலாலி வீதி, யாழ். வீதிகளில் உள்ள மின்கம்பத்தில் அண்மையில் பொருத்தப்பட்ட குழாய் மின்குமிழ்கள் ஒளிதரவில்லை. சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக இதனைக் கவனிப்பார்கள் என மக்கள் எதிர்பார்க்கின்றனர். (32)

# சிறையில் இருந்து ஹெலிகப்டரில் தப்ப முயற்சி

(பரிஸ்)

பிரான்ஸ் தலைநகர் பரிஸில் பலத்த பாதுகாப்புக் கொண்ட சிறைச்சாலை உள்ளது. மூன்று பேர்அடங்கிய குழுதுப்பாக்கிகளுடன் சென்று ஒரு ஹெலிகொப்டரை அந்த ஜெயிலுக்கு மேலே பறக்கச் செய்தனர். அங்கிருந்து கீழே கயிறு எறிந்து இதன் மூலம் இரு கைதிகளை விடுவிக்க முயன்றனர். ஜெயில் கூரை மீதி ஏறி இவர்கள் அந்தக் கயிற்றைப் பிடித்துக் கொண்டு ஹெலிகொப்டரில் ஏறத் தொடங்கினர். ஆனால் கயிறு அறுந்து விட்டது இதில் பதினைந்து ஆண்டு ஜெயில் தண்டனை கைதியான எலிது யூடோன் வயது 38 ஐம்பது அடி உயரத்தில் இருந்து விழுந்து அந்த இடத்திலேயே செத்தார். பெர்னான்டோ எனாகோ என்ற இன்னொரு கைதி படு காயமடைந்தார் இதை அடுத்து ஹெலிகொப்டரில் வந்தவர்கள் அருகிலிருந்த விளையாட்டு மைதானத்தில் இறங்கி காரில் தப்பி வட்டனர்.

## புனித காணிக்கை

(விசேட நிருபர்)

மயிலிட்டி புனிதகாணிக்கை அன்னை திருப் பாலத்துவ சபைச் சிறார்களின் திருநாள் 25-ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மிகச் சிறப்பாக நடந்தேறியது.

காலை 7 மணிக்கு பங்குத் தந்தை வண. பீற்றர் துரைரத்தினம், துணைப் பங்குத் தந்தை வண. பெனற் அடிகள் இணைந்து திருநாள் சிறப்புக் கூட்டுத் திருப்பலியை ஒப்புக் கொடுத்தனர்.

மாலை 5 மணிக்கு சிறுவர், சிறுமிகளின் கலை நிகழ்ச்சிகளுடன் திருப்பாலத்துவசபைச் சிறார்களின் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. (21)

## கண்நோய்

(தீவுப்பகுதி)

ஊர்காவற்றுறை, நெடுந்தீவு, நயினாதீவு, அனலைதீவு, புங்குடுதீவு, லைடன் தீவு ஆகிய தீவுப்பகுதிகளில் ஒருவித கண் வருத்தம் ஏற்பட்டுள்ளது. இக் கண் வருத்தம் ஒரு வீட்டில் ஒருவருக்கு வந்தால் ஏனையோருக்கும் அது விரைவில் தொற்றி விடுவதாகவும் கூறப்படுகிறது.

## குழந்தை இறந்ததும் தாய் மறைந்தார்

(யாழ்ப்பாணம்)

யாழ். வைத்தியசாலைக்கு தன் குழந்தையை சுகப்படுத்த வந்த தாயார், குழந்தை மரணமானவுடன் தலைமறைவாகி விட்டார்.

தனலட்சுமி என்ற நான்கு மாதச் சிசு வயிற்றோட்டம் காரணமாக மரணமானவுடன் தாயார் தலை மறைவாகி விட்டார்.

முத்துஐயன்கட்டு என்ற தாயாரின் முகவரிக்கு யாழ். வைத்தியசாலைப் பொலிஸ் பிரிவு, மேற்படி சம்பவம் காரணமாக கடிதம் அனுப்பி உள்ளது.

மரணமான குழந்தையின் சடலம் தற்போது யாழ். ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. (தி)

## ஹரோயினுடன் பிடிபட்டார்

(கொழும்பு)

திருவந்தபுரத்திலிருந்து விமான மார்க்கமாகச் கொழும்பு வந்த மட்டக்களப்பைச் சேர்ந்த தமிழ்ரான பொறியியலாளர் ஒருவர் 444 கிராம் ஹரோயினுடன் கட்டுநாயக்கா சர்வதேச விமான நிலையத்தில் பிடிபட்டுள்ளார்.

சுங்கப் பரிசோதனையின் போது ஹெரோயின் கைபைக்குள் மறைத்து வைத்திருக்கக் காணப்பட்டது.

சுங்க அதிகாரிகளினால் கைப்பற்றப்பட்ட ஹரோயினின் தற்போதைய சந்தை விலை ரூபா 150.000 எனத் தெரியவருகிறது.

## சுதுமலையில் கலாசார நிகழ்ச்சி

(சுதுமலை)

சுதுமலை அம்மன் கோவில் முன்றலில் நேற்று முன் தினம் புதன்கிழமை மாலை விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி கலாச்சாரப் பிரிவினால் ஒழுங்கு செய்யப்பட்ட ''நடந்து வந்த பாதையிலே'' என்ற வில்லிசையும், ''விடிவைத்தேடி'' என்ற நாடகமும் இடம்பெற்றன. மாலை 7.30 மணிக்கு ஆரம்பமான இந்நிகழ்ச்சிகளுக்கு மாலை 5.30 மணிக்கே மக்கள் பெருந்தொகையாகக் கூடினார்கள்.

## பொதுக்கூட்டம்

யாழ். மறுமலர்ச்சிக் கழகத்தின் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில், யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக யாப்பு பற்றியும், கழகத்தின் நோக்கம் பற்றியும் புதிய அங்கத்தவர்களுக்கு விளக்கமளிக்கப் படவுள்ளது. (தி)

## இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை வேண்டுமாம்

(பருத்தித்துறை)

வடமராட்சி கிழக்கு பிரதேசசபைப் பகுதியில் இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலை அமைத்துத் தருமாறு இப்பகுதி சமூகசேவை நிறுவனங்கள் இணைந்து யாழ் உள்ளூராட்சி உதவி ஆணையாளார். திரு. எஸ். டி. கைலாலை வைக் கேட்டுள்ளன.

மிகப்பின் தாங்கிய வசதிகள் குறைந்த இப்பகுதியில் வைத்திய சேவைகளை வழங்குவதற்கு இலவச சித்த ஆயுர்வேத வைத்தியசாலையின் முக்கியத்துவத்தை அச் சமூக சேவை நிறுவனங்கள் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு மிக விளக்கமாகச் சுட்டிக்காட்டியுள்ளனர் (25)

## மின்னல் தாக்கி ஒருவர் மரணம்

(நெடுங்கேணி)

நெடுங்கேணி பட்டிக்குடியிருப்பு கிராமத்தில் ஏற்பட்ட இடி மின்னல் தாக்குதலில் ஒருவர் காலமானார். பட்டிக் குடியிருப்பு கிராமத்தைச் சேர்ந்த திரு. த. ஸ்ரீஆனந்தராசா வயது 35 என்பவரே இந் தாக்குதலில் மரணமானவராவார்.

## சமயச் சொற்பொழிவு

ஈச்சமோட்டை ஸ்ரீ ஞான வைரவர் ஆலயத்தில் 2-ஆம் திகதி வெள்ளிக்கிழமைமாலை 5-மணிக்கு வைத்திய கலாநிதி. ச நமசிவாயம் அவர்கள் ''சைவ நற்சிந்தனைகள்'' என்னும் பொருளில் சொற்பொழிவு நிகழ்த்துவார். இச் சொற்பொழிவினை மாதந்தோறும் வருகின்ற முதல் வெள்ளிக்கிழமையில் திருக்கேதீச்சரம் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள் தொண்டர்சபையினர் ஒழுங்கு செய்து நடாத்தி வருகின்றார்கள்.

ஈழநாதமே வளர்கவென
வாழ்த்துகிறோம்

ஓடர் நகைகள் குறித்த தவணையில்
செய்து கொடுக்கப்படும்

சி. முத்துக்குமாரு அன் சன்
நகை வியாபாரம்

175, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

ஈழநாதமே உன் செய்திகளை
ஈழம் எங்கும் பரப்புவாயாக!

எம்மிடம்
பலசரக்குச் சாமான்கள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக்கொள்ளலாம்

புகழ் ஸ்ரோர்ஸ்
சுன்னாகம்

ஈழநாதமே!
உன் புகழ் வையகம் எங்கும்
வளர்க! ஓங்குக!!

குட்லக் எம்போறியம்
300, கே. கே. எஸ். றோட்,
யாழ்ப்பாணம்.
TEL: 22196 (B-128)

எங்கள் தமிழும் தாயகமும்
ஈழமே என முரசறைந்து வருவாய்
ஈழநாதமே !

உத்தரவாதமும் உறுதியும்
நவீன வேலைப்பாடும் உள்ள
அழகிற் சிறந்த
தங்க நகைகளுக்கு
சிறந்த ஸ்தாபனம்

செ. கந்தசாமி அன் சன்ஸ்
[நகை வியாபாரம்]
206, கே. கே. எஸ். றோட், முட்டாஸ் கடை சந்தி,
யாழ்ப்பாணம்.

'ஈழநாதம்' வளர்கவென
வாழ்த்துகின்றோம்

Siva Electrical Stores
சிவா எலெக்றிக்கல் ஸ்ரோர்ஸ்

சகலவிதமான மின்சார உபகரணங்கள் சில்லறையாகவும்
மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

635, K. K. S. வீதி,
நாச்சிமார்கோவிலடி
யாழ்ப்பாணம்.

*With Best Compliments From*

சுன்னாகம்

---

எங்கள் தமிழும் தாயகமும்
ஈழமே என முரசறைந்து வருவாய்
ஈழநாதமே !

உத்தரவாதமும் உறுதியும்
நவீன வேலைப்பாடும் உள்ள
அழகிற் சிறந்த

தங்க நகைகளுக்கு

சிறந்த ஸ்தாபனம்

**செ. கந்தசாமி அன் சன்ஸ்**

[நகை வியாபாரம்]

206, கே. கே. எஸ். றோட், முட்டாஸ் கடை சந்தி,
**யாழ்ப்பாணம்.**

(B- 130)

---

'ஈழநாதம்' வளர்கவென
வாழ்த்துகின்றோம்

**Siva Electrical Stores**
**சிவா எலெக்றிக்கல் ஸ்ரோர்ஸ்**

சகலவிதமான மின்சார உபகரணங்கள் சில்லறையாகவும்
மொத்தமாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

635, K. K. S. வீதி,
நாச்சிமார்கோவிலடி
யாழ்ப்பாணம்

B - 131

---

## பொதுக்கூட்டம்

யாழ். மறுமலர்ச்சிக் கழகத்தின் பொதுக்கூட்டம் இன்று முற்பகல் 10 மணியளவில், யாழ். பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் நடைபெற உள்ளது.

இக்கூட்டத்தில் கழக யாப்பு பற்றியும், கழகத்தின் நோக்கம் பற்றியும் புதிய அங்கத்தவர்களுக்கு விளக்கமளிக்கப் படவுள்ளது. (தி)

---

**குட்லக் எம்போறியம்**

300, கே. கே. எஸ். றோட்,
**யாழ்ப்பாணம்.**

TEL: 22196 (B-128)

---

ஈழநாதமே உன் பத்திரிகை விற்பனை
வளர வாழ்த்துகின்றோம்

தென்னிலங்கையிலும் உன் பத்திரிகை வீரத்தைக் காட்டவேண்டும்

வாழ்க ஈழநாதம் <---> வெல்க ஈழநாதம்

**புவனா றேடர்ஸ்**

இல. 9, காங்கேசன்துறை வீதி, சுன்னாகம்.

**எம்மிடம்:** எவர்சில்வர், பிளாஸ்ரிக், அன்பளிப்புப் பொருட்கள்
பெண்களுக்கு ஏற்ற கைக்கடிகாரம், ஆண்களுக்கு ஏற்ற கைக்கடிகாரம்,
சுவர்க் கடிகாரம் முதலியவற்றிற்கு

**புவனா றேடர்ஸ்** சுன்னாகம்.

(B/124)

---

*With Best Compliments From*

**N. Vaitilingam & Co. LTD**

**138, K. K. S. Road, Jaffna.**

கட்டிடப் பொருட்கள்,

முள்ளுக்கம்பி, கம்பிஆணி,

**River Broad** கல்வனைஸ்ட் பிளேன் தகரம்,

நெளிவு தகரம் என்பன நிதான விலையில்

[illegible]றுக் கொள்ளலாம்.

TEL: 22530 B. 121

---

எங்கள் தமிழும் தாயகமும் எமதே என முரசறைந்து வருவாய் ஈழநாதமே!

**CITY MEDICALS** SPECIALISTS IN PHARMACEUTICALS

*487, Hospital Road, JAFFNA.* *Telephone; 24191, 24192*

B.108

## சிந்தனைக்கு

சொந்த அரசும் புவிச்
சுகங்களும் மாண்புகளும்
அந்தகர்க்குண்டாகுமோ? - கிளியே
அலிகளுக்கின்பமுண்டோ?

- பாரதியார்

ஈழநாதம்

31, வைமன் வீதி, யாழ்ப்பாணம். 02 - 03 - 90

# இதுதான் வழி!

வடக்கு கிழக்கு மாகாணசபையின் எதிர்காலம் என்ன?

மாகாணசபைக்கு அதிகாரம் எதுவும் இல்லையென்று முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இப்பொழுது உரத்துச் சொல்கிறார்.

அதிகாரங்களை வடக்கு கிழக்கு மாகாணசபைக்குப் பெற்றுத் தருவதற்கு இந்திய மத்திய அரசு இலங்கை அரசை நெருக்க வேண்டுமென்று ஈ. பி. ஆர். எல். எவ். தமிழக முதல்வர் கருணாநிதியைக் கேட்டிருக்கிறது.

வடக்கு கிழக்கு மாகாணசபையின் பிரச்சினைகள் சம்பந்தமாகச் சந்தித்துப் பேசுவதற்கு முதலமைச்சர் வரதராஜப்பெருமாளை இலங்கை ஜனாதிபதி பிரேமதாசா எப்போதோ அழைத்திருந்தார்.

இலங்கை ஜனாதிபதியை இது சம்பந்தமாக முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் இன்னமும் சந்திக்கவில்லை.

அதிகாரப் பரவலைக் கேட்கவேண்டிய இடத்தில் கேட்காமல் சென்னையையும் டில்லியையும் கேட்பதிலிருந்தே மாகாணசபையை நிர்வகிப்பதில் வரதராஜப் பெருமாளுக்கு அக்கறையில்லை; இது நீடிக்கும் என்ற நம்பிக்கையுமில்லை!

வரதராஜப்பெருமாளை முதலமைச்சராகக்கொண்ட வடக்கு கிழக்கு மாகாணசபை தமிழ் பேசும் மக்களின் ''பாதுகாப்புக்காக''வும் வடக்கு கிழக்கு மாகாணசபையின் ''பாதுகாப்புக்காகவும்'' முதலில் ''மக்கள் தொண்டர் படை'' (சி. வி. எவ்.)யைத் திரட்டியது.

இப்படைக்கு இலங்கைப் பொலிஸ் பயிற்சியளித்தது. இலங்கை அரசு ஆயுதமும் வழங்கியது.

இது போதாதென்று தங்களின் ''பாதுகாப்புக்காக''வும் ''தமிழ்த் தேசிய இராணுவம்'' ஒன்றை இளைஞர்களைப் பலவந்தமாகப் பிடித்துச்சென்று உருவாக்கியது. இந்த இராணுவத்துக்கு இந்திய இராணுவம் ஆயுதங்களை வழங்கி பயிற்சியுமளித்தது.

இந்திய இராணுவம் கிழக்கிலிருந்து முதலில் வெளியேறியதும் இப்படையைச் சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் பலர் ஒடித்தப்பினர்;

# இந்தியாவின் ''கலாசார ஆக்கிரமிப்பும்'' சினிமாவும்

இந்தியாவின் விரிவாக்கத் திட்டத்தின் ஒரு தோற்றம் ஸ்ரீ லங்கா மீதான இந்தியாவின் 'கலாச்சார ஆக்கிரமிப்பு' என்பது ஜனதா விமுத்திப் பெரமுனையின் கொள்கையில் ஓர் அம்சமாகும். இந்தியாவிலிருந்து அதிகளவு தமிழ்ப்படங்கள் இறக்குமதியாகின்றன. ஒரு வழியில் இப்படங்கள் ஸ்ரீ லங்காத்தமிழர்களையும் தமிழ் நாட்டில் உள்ள அவர்களது உடன்பிறப்புக்களையும் பிணைக்க உதவுகின்றன. திராவிட முன்னேற்றக் கழகத்துக்கும், தமிழ் நாட்டுச் சினிமாத் தொழில்த் துறைக்கும் நெருக்கமான ஒரு தொடர்புண்டு. இதனால் தி. மு. க. வின் கொள்கை பரப்பும் சாதனமாகத் தமிழ் சினிமாவிளங்குகிறது. சினிமாவின்மூலம் தி. மு. க. வினர் தமது கொள்கைகளுக்கும் அழுத்தம் கொடுக்கிறார்கள். இந்த வகையில் உலகம் பூராகவுமுள்ள தமிழர்களுடனான தி. மு. க. வினரின் தொடர்பு விஸ்தாரமாகியுள்ளது. தமிழ்ச் சினிமாப் படத்தயாரிப்பு உள்ளூரில் இல்லை என்றகாரணத்தால் தமிழரும், இலங்கைத் தமிழரும் தொடர்பியல் சாதனமான சினிமாப் படங்கள் முன்வைக்கும் கருத்துக்களினால்கவரப்படுகிறார்கள். இசை, சினிமா, இலக்கியம்- இவைகளுக்கெல்லாம் ஸ்ரீலங்கா வாழ் தமிழர், தமிழ் நாட்டில் தங்கியுள்ளார்கள். பெருந்தோட்டங்களில் வாழும் தோட்டத்தொழிலாளர்கள் பலர் இந்தியாவின் மண்ணில் மிதித்திருக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் 'இந்தியன்' என்ற சிந்தனை ஓட்டத்திலேதான்வாழ்கிறார்கள்.

இவர்களுக்குத் தமிழ்ச்சினிமாப் படங்கள் ''...

...கள். சிங்கள இரசிகர்கள் சில சமயங்களில் காட்சிகளுக்கேற்றவாறு சிரிக்கவும் அழவும் செய்கிறார்கள். கதை ஓடிக்கொண்டிருக்குப்போது, படத்தில் வரும் சம்பவங்களை ஆதரிப்பது போல் கோஷம் போடுகிறார்கள். ஹிந்திப் படங்களுக்கு இருக்கிற பார்வையாளர் பங்களிப்பு சிங்களச் சினிமாவுக்கு கிடையாது.

### ஹிந்தி நடிகர்களின் செல்வாக்கு

சிங்களவர் மத்தியில் ஹிந்தி நடிகர்களுக்கு உள்ள பரவலான செல்வாக்கு, எமது உள்ளூர் சிங்கள நடிகர்களுக்கு கிடையாது, சிங்களப் பொப் இசையுடன் ஹிந்திப் பாடல்கள் ஏட்டிக்குப் போட்டி போட்டன. தமிழ்ப் பட இரசிகர்கள் எம். ஜீ. இராமச்சந்திரனையும், சிவாஜிகணேசனையும் கதாநாயகர்கள் என்று வழிபடுவதுபோல், ரஜேஸ்கண்ணாவையும் அமித்தாப் பச்சனையும், கிசூர் குமாரரையும், லதா மங்கேஸ்காரையும் சிங்களவர் ஏற்றிப் போற்றினர். சிங்கள மொழியில் எந்தப் பாடகியும் லதா மங்கேஸ்காருக்கு ஈடிணையில்லை என்பது சிங்களவரின் எண்ணமாகும். உண்மையில் சிங்கள மக்களின் மனசு வட இந்தியக் கலாச்சாரம் படையெடுப்புக்கும் பழக்கப்பட்டுப் போய்விட்டதுபோலத் தெரியவருகிறது. சிங்களவருக்கும் வட இந்தியாவுக்கும் இடையிலான பிரிக்க முடியாத 'ஆரிய இணைப்பு' அடிமனதில் பதிந்திருப்பது இதற்கெல்லாம் காரணகாரியம் என்று சிலர்ஆச்சரிப்படலாம். தமிழ்மொழியிலுள்ள வல்லின உச்சரிப்புகள் குறுகிய ஓசை ...

...விட்டன. எண்பதுகளின் ஆரம்பத்தில் சிங்களச் சினிமாத் தொழிலை வளர்ப்பதற்காக ஹிந்திப் படங்களின் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டது. பேரவா கொண்ட மக்கள் மாற்று வழிகளை நாடினார்கள். சில சிங்களப் பாடகர்கள் ஹிந்திப் பாடல்களைப் பாடி இரசிகர் மத்தியில் செல்வாக்கைப் பெற்றனர்.

### விஜயகுமாரரணதுங்க ஒரு பிரயீட்டு விளைவு

ஹிந்திப் படங்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டபோது ஹிந்தி நடிகர்களுக்குப் பதிலாக விஜயகுமாரரணதுங்க 1980 களில் பெற்ற செல்வாக்கு ஒரு பிரதியீட்டு விளைவாகும். விஜயகுமாரரணதுங்க, அமிர்தாப்பச்சன், ரஜேஸ்கண்ணா ஆகியோரின் 'மாதிரி'யாகவே கருதப்பட்டார். ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கூட அதன் அன்றாட நிகழ்ச்சிநிரலில்ஹிந்தி பொப் இசைக்கும் நீண்ட நேரம் ஒதுக்கியிருந்தது. சில முக்கியமான வியாபார நிறுவனங்களும் தமக்கு விளம்பர ஒலிபரப்புகளில் செல்வாக்கான தென் இந்திய அல்லது வட இந்திய பாடல்களை ஒலிபரப்பினார்கள். இவையெல்லாவற்றையும் கருத்திற்கொண்டால் சிங்களவர் விருப்பமில்லாமல் கலாச்சார, சமய, மொழியடிப்படையில் வட இந்தியருடன் பின்னிப் பிணைக்க...

## மக்கள் மடல்

ஐயா!

கொழும்புக்கு அடுத்த பெரிய பஸ் தரிப்பு நிலையம் யாழ்ப்பாண பஸ் தரிப்பு நிலையமாகும். குருநாகல், கொழும்பு பஸ் தரிப்பு நிலையங்களில் இருப்பது போல் பிரயாணிகளுக்கான வசதிகளுடன் கூடிய நிரந்தர கட்டிடங்கள் கொண்ட பஸ் தரிப்பு நிலையம் யாழ்ப்பாணத்தில் கிடையாது. இருந்தும் அதிகமான பிரயாணிகள் இந்த பஸ் தரிப்பு நிலையத்தில் தங்கி இலங்கையில் உள்ள முக்கிய நகரங்களுக்கெல்லாம் பேருந்து மூலம் பிரயாணம் செய்கிறார்கள். தூர இடங்களிலிருந்தும் வந்து யாழ். பஸ் தரிப்பு நிலையத்தில் இறங்குகிறார்கள்.

யாழ்ப்பாண பஸ் நிலையத்தைப் பொறுத்த வரையில் இலங்கையில் உள்ள பெரிய நகரங்களான கொழும்பு, கண்டி, காலி, குருநாகல், மாத்தறை ஆகிய இடங்களில் உள்ள பஸ் தரிப்பு நிலையங்களைவிட ஒரு 'சிறப்பு' யாழ்ப்பாண பஸ் தரிப்பு நிலையத்துக்கு உண்டு.

இந்த யாழ். பஸ் தரிப்பு நிலையத்தில் சழிவகற்றுவதற்கு ஒரு மலசல கூடம் கூட இல்லை. தூர இடங்களில் என்ன, மிகவும் கிட்ட இடங்களில் இருந்து வந்து பஸ் தரிப்பு நிலையத்தை அடை பிரயாணிகள், குறிப்பாகப் பெண்கள் மலசல கூட வசதியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறார்கள். முன்பெல்லாம் பஸ் தரிப்பு நிலையத்தில் மின்சார வீதியை அண்டினாற் போல் இருந்த ஆண் - பெண் மலசல கூடத்தையும் காணவில்லை. இதை யாரோ ஒருவர் ஆக்கிரமித்துத் தனதாக்கிக் கொண்டு இருக்கிறாராம். இதைக் கூடக் கவனிக்க நகர சபை அதிகாரிகளுக்கு நேரமில்லைப் போலும்.

கொழும்பில் ஐப்பானிலிருந்து தருவிக்கப்படவிருக்கும் நடமாடும் கழிவறைகள் ஏற்படுத்தப் போகிறார்களாம். இந்தியாவில் சனநெருக்கடியான நகரங்களின் கட்டண சழிவறைகள் உண்டு. ஆனால் யாழ் நகரத்தில் பஸ் தரிப்பு நிலையத்தில் ஒரு சாதாரணமான மலசல கூடம் கூட இல்லை. இந்த லட்சணத்தில் யாழ்ப்பாண நகரில் உள்ள உயர் மட்ட அதிகாரிகள் யாழ் நகரப் புனருத்தாரணம் பற்...

## ஊர்சுற்றி எழுதுவது

முந்தாநாள் எனக்கொரு கடிதம் வந்திருந்தது. எமது பணிமனையிலிருந்து சில யார் தூரத்தில் வசிக்கும் அன்பர் - எனக்கு நன்கு தெரிந்தவர் - அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார்.

'இலங்கையின் பிரபல பத்திரிகையாளரும் தொலைக் காட்சி அறிவிப்பாளருமான திரு. ரிச்சாட் டீ சொய்சா படுகொலை செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை. ஆனால் கேவலம் ஜெயலலிதா விபத்திற்கு முன் பக்கச் செய்தி. இதை இங்குள்ள பத்திரிகைகள் செய்தன.''

இப்படி அந்த அன்பர் தமது கடிதத்தில் என்மீது குற்றம் சுமத்தியிருந்தார்.

திரு. ரிச்சாட் டீ சொய்சாவின் படுகொலைச் செய்தியை நாங்கள் பிரசுரித்திருந்தோம். கொழும்புப் பத்திரிகைகள் இதைத் தொடர்ந்து செய்திகளும், கட்டுரைகளும் வெளியிட்டு வருவதற்கு வேறு காரணங்கள் இருக்கின்றன. கொலைகளைக் கண்டுபிடிக்கிறார்களோ இல்லையோ யார் மீதாவது பழியைப் போட வேண்டும் என்பதே அவற்றின் நோக்கம்.

ரிச்சாட் டீ சொய்சாவின் பன் அஜித்சமர நாயகா தி ஜலன்ட் பத்திரிகையின் துணை ஆசிரியர். இவர் ஒரு தமிழ்ப் பெண்ணையே மணம் செய்திருக்கிறார். திரு. ரிச்சாட் டீ சொய்சாவின் தாயார்கொழும்பில் புகழ்பூத்த சரவணமுத்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சஞ்சிகையில் அஜித் சமர நாயகா எழுதிய கட்டுரை வெளிவந்திருந்தது. இதைப் பார்த்த ரிச்சாட், 'றோம் நகர் எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்த மாதிரி யாழ்ப்பாணத்தில் அரசபடைகள் சடும் தாக்குதல் நடத்திக் கொண்...

லிருந்தே மாகாணசபையை நிர்வகிப்பதில் வரதராஜப் பெருமாளுக்கு அக்கறையில்லை; இது நீடிக்கும் என்ற நம்பிக்கையுமில்லை!

வரதராஜப்பெருமாளை முதலமைச்சராகக்கொண்ட வடக்கு கிழக்கு மாகாணசபை தமிழ் பேசும் மக்களின் ''பாதுகாப்புக்காக''வும் வடக்கு கிழக்கு மாகாணசபையின் ''பாதுகாப்புக்காகவும்'' முதலில் ''மக்கள் தொண்டர் படை'' (சி. வி. எவ் )யைத் திரட்டியது.

இப்படைக்கு இலங்கைப் பொலிஸ் பயிற்சியளித்தது. இலங்கை அரசு ஆயுதமும் வழங்கியது.

இது போதாதென்று தங்களின் ''பாதுகாப்புக்காக''வும் ''தமிழ்த் தேசிய இராணுவம்'' ஒன்றை இளைஞர்களைப் பலவந்தமாகப் பிடித்துச்சென்று உருவாக்கியது. இந்த இராணுவத்துக்கு இந்திய இராணுவம் ஆயுதங்களை வழங்கி பயிற்சியுமளித்தது.

இந்திய இராணுவம் கிழக்கிலிருந்து முதலில் வெளியேறியதும் இப்படையைச் சேர்ந்தவர்கள் விடுதலைப் புலிகளுடன் ஏற்பட்ட மோதலில் பலர் ஒடித்தப்பினர்; மற்றும் சிலர் விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்களுடன் சரணடைந்தனர்; சிலர் சிறிலங்கா இராணுவத்திடம் சரண் புகுந்தனர்.

வடக்கிலிருந்து இந்தியப்படை வெளியேறியதுடன் ஈ. பி. ஆர். எல். எவ், ஈ. என். டி. எல். எவ், ரெலோ முகாம்களும் மூடப்பட்டன. மக்கள் தொண்டர்படை, தமிழ்த் தேசிய இராணுவமும் இவர்களுடனேயே சென்று விட்டன.

இப்பொழுது திருகோணமலையிலும் இந்தியப்படைகள் நிலைகொண்டிருக்கும் சிறிய வட்டத்துக்குள்தான் தமிழ்த் தேசிய இராணுவம் இப்பொழுது இருக்கிறது.

இந்தியப்படைகள் இம்மாத முடிவுக்குள் இங்கிருந்து வெளியேறியதும் இந்த இராணுவம் விடுதலைப் புலிகளிடம் சரணடைய வேண்டும் அல்லது இந்திய இராணுவத்தின் பின்னால் இந்தியா செல்ல வேண்டும்.

இதேசமயம் வடக்கு கிழக்கு மாகாணசபையின் முக்கிய அமைச்சுக்களின் செயலாளர்கள் சிலர் கொழும்புக்குச் சென்று இன்னமும் திரும்பவில்லையாம். அவர்கள் பற்றிய தகவலே கிடைக்கவில்லை எனவும் தெரிகின்றது.

இந்நிலையில இம்மாத முடிவுக்குள் இந்தியப்படை திருகோணமலையிலிருந்து வெளியேறியதும் இப்போதைய வடக்கு கிழக்கு மாகாணசபை தொடர்ந்தும் இயங்க முடியுமா என்ற அச்சமும் ஐயமும் எழுந்துள்ளது.

தமிழக முதல்வரிடம் ஈ. பி. ஆர். எல். எவ். கொடுத்த பத்தொன்பது யோசனைகளும் முதல்வர் கருணாநிதியின் முயற்சியைத் தடுத்துள்ளது.

சமரச முயற்சிக்கு இனி இடமிருக்குமென்று எண்ணத் தோன்றவில்லை,

வடக்கு கிழக்கு மாகாணசபை உறுப்பினர்கள் தமது பகுதிகளுக்குச் சென்று பல மாதங்களாகிவிட்டன. திருகோணமலையும் கொழும்பும் சென்னையுமாகவே அவர்கள் திரிகிறார்கள்.

இனியும் மாகாணசபை உறுப்பினர் பதவியைக் கட்டி அழுது என்ன பயன்?

கௌரவமாக முதலமைச்சரும் மற்றவர்களும் பதவி விலகி மீண்டும் ஒரு தேர்தலுக்கு வழி வகுப்பதே இன்றுள்ள ஒரே வழி!

உள்ளூரில் இல்லை என்றகாரணத்தால் தமிழரும், இலங்கைத் தமிழரும் தொடர்பியல் சாதனமான சினிமாப் படங்கள் முன்வைக்கும் கருத்துக்களினால்கவரப்படுகிறார்கள். இசை, சினிமா, இலக்கியம்- இவைகளுக் கெல்லாம் ஸ்ரீலங்கா வாழ் தமிழர், தமிழ் நாட்டில் தங்கியுள்ளார்கள். பெருந்தோட்டங்களில் வாழும் தோட்டத்தொழிலாளர்கள் பலர் இந்தியாவின் மண்ணில் மிதித்திருக்கமாட்டார்கள். ஆனால் அவர்கள் 'இந்தியன்' என்ற சிந்தனை ஓட்டத்திலேதான்வாழ்கிறார்கள்.

இவர்களுக்குத் தமிழ்ச்சினிமாப் படங்கள் ''சொந்த வீட்டில்' இருப்பதைப்போன்ற ஒருசுகானுபவத்தைக் கொடுக்கின்றன. தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் தமிழ், சிங்கள, முஸ்லிம் தலைவர்களை ஏற்றுக்கொள்வதில்லை என்பது ஜே. வி. பி. யின் கருத்தாகும். தோட்டத் தொழிலாளர்கள் வீடுகளில் தொங்கவிடும் படங்கள் தமிழ்நாட்டு அரசியல் தலைவர்களினது அல்லது இந்திய மத்திய அரசைச் சேர்ந்த தலைவர்களின் படமாக இருக்கும். 1976-77 காலப் பகுதியில் ஜே. வி. பி. யினர், ஸ்ரீ லங்கா மீதான இந்தியாவின் விரிவாக்கம் கொள்கையை செயற்படுத்த உதவும் 'அஞ்சாம் படையினர் என்று இந்திய தமிழ் வியாபாரிகளையும், தோட்டத் தொழிலாளர்களையும் கருதலாயினர்.

## சிங்களவரும் சினிமாவும்

ஹிந்திப் படங்கள் சிங்களவர் மேற்கொண்டிருந்த செல்வாக்கையும் ஜே. வி. பி. யினர் பயப்பாடுடன் பார்த்தனர். தமிழ்ப் படங்கள் உள்ளூர்த் தமிழர்களின் உணர்வைக் கிள்ளிவிட்டதுபோல் ஹிந்திப் படங்களும் தொடர்பியல் பின்னணியில் சிங்கள மக்களிடம் இனியில்லையென்ற செல்வாக்கைப் பெற்றிருந்தன. சிங்களவரைப்போல் புரிந்து கொள்ள முடியாத ஹிந்திப் படங்களுக்கு ஆர்வம் காட்டும் பார்வையாளர்களை உலகத்தில் வேறெங்கும் காணமுடியாது. இப்படங்கள் சிங்களத்திலும் டப்(பிரதி) செய்யப்படுவதில்லை. நடிகர்கள் விளங்காத மொழியில் ஏதோ பேசுவார்

குமாரரையும், லதா மங்கேஸ்காரையும் சிங்களவர் ஏற்றிப் போற்றினர். சிங்கள மொழியில் எந்தப் பாடகியும் லதா மங்கேஸ்காருக்கு ஈடிணையில்லை என்பது சிங்களவரின் எண்ணமாகும். உண்மையில் சிங்கள மக்களின் மனசு வட இந்தியக் கலாச்சாரம் படையெடுப்புக்கும் பழக்கப்பட்டுப் போய்விட்டதுபோலத் தெரியவருகிறது. சிங்களவருக்கும் வட இந்தியாவுக்கும் இடையிலான பிரிக்க முடியாத 'ஆரிய இணைப்பு' அடிமனதில் பதிந்திருப்பது இதற்கெல்லாம் காரணகாரியம் என்று சிலர்ஆச்சரிப்படலாம். தமிழ்மொழியிலுள்ள வல்லின உச்சரிப்புகள் குறுகிய ஓசைகள் ஆகியவற்றினை விட ஹிந்தி மொழி சிங்களவரின் காதுக்கு இனிமையாக இருப்பது ஓர் நடைமுறைக்காரணியாக இருக்கலாம்.

## திராவிட இலக்கணவடிவம்

சிங்கள மொழியானது திராவிட(தமிழ்) இலக்கண வடிவத்தைக் கொண்டமைந்தது, மாறாகச் சிங்கள மொழியினதும், ஹிந்தியினதும் பிறப்பு மூலம் ஒன்றுதான். எனவே ஹிந்தி பொப்இசை தெரியாத மொழியில் அமைந்திருந்தும் கூட சிங்களவர் அதை அதன் சங்கீதப் பெறுமானத்துக்காக இரசிக்கிறார்கள். மற்றும்படி சிங்களவரும் வட இந்தியர்களும் ஒரே வகையான பண்பாட்டுக் கோலத்தையும், ஒழுக்கக் கோட்பாடுகளையும் கொண்டவர்கள். ஆகவே இந்தியாவைவிட ஹிந்திப்படங்களுக்கு சிங்களவர் மத்தியிலுள்ள செல்வாக்கு அலாதியானது. இவ்வகையில் பார்த்தால் நகரங்களில் ஹிந்திப் படங்கள் மாதக் கணக்கிலும் வருடக்கணலும் சினிமா தியேட்டர்களில் ஓடுவதுவழமைக்கு மாறானதல்ல. ஹிந்திப்படங்கள் ஸ்ரீலங்காவில் ஓடி உழைத்த பணத்துக்கருகில் சிங்களப் படங்களால் நெருங்கவேமுடியாது.

மேற்சொன்ன காரணங்களைக் கருத்தில் கொண்டால் ஜே. வி. பி. 'ஹிந்திப்' படையெடுப்பை பயப்பாடுடன் அணுகியதில் ஆச்சரியப்படபடுவதற்கு ஒன்றுமில்லை. வட இந்தியப் பண்பாட்டின் அம்சங்கள் சிங்களவர் மத்தியில் மிக ஆழமாகப் பதிந்துடார். ஸ்ரீலங்கா ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் கூட அதன் அன்றாட நிகழ்ச்சிநிரலில்ஹிந்தி பொப் இசைக்கும் நீண்ட நேரம் ஒதுக்கியிருந்தது. சில முக்கியமான வியாபார நிறுவனங்களும் தமக்கு விளம்பர ஒலிபரப்புகளில் செல்வாக்கான தென் இந்திய அல்லது வட இந்திய பாடல்களை ஒலிபரப்பினார்கள். இவையெல்லாவற்றையும் கருத்திற்கொண்டால் சிங்களவர் விருப்பமில்லாமல் கலாச்சார, சமய, மொழியடிப்படையில் வட இந்தியருடன் பின்னிப் பிணைந்து வட இந்தியர்களைப்பற்றிய பதிவுகள் சிங்களவரின் அடிநிலை மனதிலும் பதிந்து விட்டன எனலாம்.

நன்றி: ஐலண்ட்

மின்சார வீதியை அண்டினாற் போல் இருந்த ஆண் - பெண் மலசல கூடத்தையும் காணவில்லை. இதை யாரோ ஒருவர் ஆக்கிரமித்துத் தனதாக்கிக் கொண்டு இருக்கிறாராம். இதைக் கூடக் கவனிக்க நகர சபை அதிகாரிகளுக்கு நேரமில்லைப் போலும்.

கொழும்பில் ஐப்பானிலிருந்து தருவிக்கப்படவிருக்கும் நடமாடும் கழிவறைகள் ஏற்படுத்தப் போகிறார்களாம். இந்தியாவில் சனநெருக்கடியான நகரங்களின் கட்டண கழிவறைகள் உண்டு. ஆனால் யாழ் நகரத்தில் பஸ் தரிப்பு நிலையத்தில் ஒரு சாதாரணமான மலசல கூடம் கூட இல்லை. இந்த லட்சணத்தில் யாழ்ப்பாண நகரில் உள்ள உயர் மட்ட அதிகாரிகள் யாழ் நகரப் புனருத்தராணம் பற்றிப் பேசுகிறார்கள். கழிவறை யாழ்ப்பாண பஸ்தரிப்பு நிலையத்தில் எப்போது நிறுவப்படுமோ? சம்பந்தப்பட்டவர்கள் கவனிப்பார்களா?

க. ம. சுந்தரமூர்த்தி
பெரியகடை
யாழ்ப்பாணம்

# பருத்தித்துறை கொத்தணி உடற் பயிற்சி முடிவுகள்

பருத்தித்துறை கொத்தணி உடற்பயிற்சிப் போட்டிகள் திங்கட்கிழமை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் கொத்தணி பிரதி அதிபர் திரு. ந. அனந்தராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இப் போட்டிகளில் பருத்தித்துறைக் கொத்தணியில் உள்ள பதினான்கு பாடசாலைகளில் எட்டுப் பாடசாலைகள் பங்குபற்றியிருந்தன.

13 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை யாழ். பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயமும், இரண்டாம் இடத்தை யாழ். அல்வாய் அம்பாள் வித்தியாலயமும் பெற்றன.

13 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை யாழ். பருத்தித்துறை சித்தி விநாயகர் விததியாலயத்திற்கும் இரண்டாம் இடத்தை யாழ். தோமஸ் றோ. க. பெண்கள் பாடசாலையும் மூன்றாம்இடத்தை யாழ். அல்வாய் அம்பாள் வித்தியாலயமும் பெற்றன.

17 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டியில் முதலாம் இடத்தை யாழ். பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயமும் இரண்டாம் இடத்தை யாழ். ஹாட்லிக் கல்லூரிக்கும்,

17 வயதுப் பிரிவு பெண்களுக்கான போட்டியில் முதலாம் இடம்:- யாழ். மெதடிஸ்ற் பெண்கள் உயர் கல்லூரிக்கும் இரண்டாம் இடம்:- யாழ். தும்பளை சிவப்பிரகாச மகாவித்தியாலயத்திற்கும் மூன்றாம் இடம்:- யாழ். சென் தோமஸ் றோ. க பெண்கள் பாடசாலைக்கும் கிடைக்கப் பெற்றது.

19 வயதுப் பிரிவு ஆண்களுக்கான போட்டிகள்: முதலாம் இடம்:- யா/ ஹாட்லிக் கல்லூரிக்கும்,

19 வயதுப் பிரிவு பெண் [illegible]ன போட்டியில்: முத[illegible]:- யா/ மெதடிஸ்ற் [illegible] உயர் கல்லூரிக்கும் [illegible]கப் பெற்றது.

[illegible]ட்டிகளில் நடுவர்களாக யா/ தெல்லியடி மத்திய மகா வித்தியாலய ஆசிரியர்களான திரு. வல்லிபுரம் கே. சிவானந்தர் ஆகியோரும் முன்னாள் உடற்கல்வி ஆசிரியர் திரு. ரி. இரத்தினசிங்கமும் கடமையாற்றினார்கள்.

ரிச்சாட் டீ சொய்சாவின் பின் அஜித்சமர நாயகாதி ஐலன்ட் பத்திரிகையின் துணை ஆசிரியர். இவர் ஒரு தமிழ்ப் பெண்ணையே மணம் செய்திருக்கிறார். திரு. ரிச்சாட் டீ சொய்சாவின் தாயார்கொழும்பில் புகழ்பூத்த சரவணமுத்துக் குடும்பத்தைச் சேர்ந்தவர்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் சஞ்சிகையில் அஜித் சமர நாயகா எழுதிய கட்டுரை வெளிவந்திருந்தது. இதைப் பார்த்த ரிச்சாட், 'றோம் நகர் எரியும்போது நீரோ மன்னன் பிடில் வாசித்த மாதிரி யாழ்ப்பாணத்தில் அரசபடைகள் சடும் தாக்குதல் நடத்திக் கொண்டிருக்கையில் நீ இப்படிக் கட்டுரை எழுதிக் கொண்டிருக்கிறாயே' என்று கேட்டாராம்.

'இதன் பின்னர் வடமராட்சியில் லிபரேஷன் ஒப்பரேஷன் நடந்து கொண்டிருந்தபோது அதே ரிச்சாட் தான் இராணுவத்துடன் சென்று கொலைக் காட்சிக்கு வீடியோப்படம் எடுத்து வந்தார். ஆனால் இதைப்பற்றி நான் அவரிடம் கேட்க நினைத்தேன். ஆனால் கேட்கவில்லை' என்று அஜித்சமர நாயகா பெப்ரவரி மாதம் 25ஆம் திகதிய ஐலன்ட் பத்திரிகையில் ரிச்சாட் டீ சொய்சாவுக்கு அஞ்சலி செலுத்தி எழுதிய கட்டிரையில் குறிப்பிடுகிறார்.

★ ★ ★

ஜெயலலிதாவைப் பற்றி அன்பர் குறிப்பிட்டிருப்பதாவது:-

ஜெயலலிதா இப்பொழுது நடிகையல்ல. தமிழ் நாட்டின் அரசியலையே மாற்றியமைக்கும் வல்லமை பொருந்தியவராக இருக்கிறார். கடந்த பொதுத் தேர்தலில் தமிழ் நாட்டிலிருந்து ஒரு தி. மு. கழக வேட்பாளர் கூட பாராளுமன்றத்துக்குத் தெரிவு செய்யப்படவில்லை. இப்பொழுது வெளிவந்த பழனித் தொகுதி உப தேர்தலில் கூட தி. மு. க. வெற்றி பெறமுடியவில்லை!

தமிழ் நாட்டு அரசியலில் ஜெயலலிதாவின் செல்வாக்கு அதிகம்.

ஜெயலலிதா விபத்து இனித்தான் தமிழ் நாட்டில் பெரும் சர்ச்சையைக் கிளப்பும்.

நாவாந்துறை நூலகம்



ஈழநாதம்

# பாலைதீவுக்கு யாத்திரிகர்கள் திடீர் படையெடுப்பு

(விசேட நிருபர்)

கடல் மார்க்க யாத்திரைத் தலமான பிரசித்தி பெற்ற பாலைதீவு, அர்ச் அந்தோனியார் ஆலயத்திற்கு ஆயிரக் கணக்கான யாத்திரிகர்கள் சென்றிருப்பதாகத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இம்முறை திருநாள் கொண்டாட்டங்கள் நடைபெற மாட்டாதென யாழ். ஆயர்கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகையால் அறிவிக்கப்பட்டிருந்தது தெரிந்ததே.!

நேற்றும், நேற்று முன்தினமும் குருநகர் இறங்குதுறை ஊடாக ஆயிரத்திற்கும் அதிகமான யாத்திரிகர்கள் பாலைதீவுக்குச் சென்றிருப்பதாகத் தெரியவருகிறது.

இன்றும், நாளையும், நாளை மறுநாளும் மேலும் பலர் பாலைதீவு புனித அந்தோனியார் ஆலயத்திற்குப் போகக் கூடுமென்றும் எதிர் பார்க்கப் படுகிறது. (21)

## ஜப்பானின் உதவி

(கொழும்பு)

இலங்கையில் ஏழு அபிவிருத்தி திட்டங்களுக்கு ஜப்பான் 300 கோடிரூபாவுக்கு மேல் வழங்க முடிவு செய்துள்ளது. இவை குறைந்த வட்டியில் வழங்கப்படும் என நேற்று அமைச்சரவைப் பேச்சாளர் ரஞ்சன் விஜரட்ணா தெரிவித்தார். நிதி அமைச்சரும் பிரதம அமைச்சருமான திரு. டிங்கிரி பண்டா விஜயதுங்கா மேற்கொண்ட பெரு முயற்சியினாலேயே இலங்கை அரசு அதிகாரிகளும் - ஜப்பானிய அதிகாரிகளும் இது தொடர்பான பேச்சு வார்த்தை நடத்தினர்.

# பயிலுநர் ஆசிரியர் தெரிவு; மேன்முறையீடு

# ஐந்தாம் தேதி பிரிவு பிரிவாக விசாரணை!

## யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

பயிலுநர் ஆசிரியர் தெரிவு தொடர்பாகச் செய்யப்பட்ட மேன் முறையீடுகள் பற்றிய விசாரணைகள் யாழ். கல்வித்திணைக்களத்தில் இம்மாதம் ஐந்தாம் தேதி தொடக்கம் நடைபெற உள்ளன.

மேற்படி. மேன்முறையீடு செய்தவர்களில் நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இம்மாதம் ஐந்தாம் திகதியும், யாழ்ப்பாணம், நல்லூர், சாவகச்சேரி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இம்மாதம் ஆறாம் திகதியும், பருத்தித்துறை, பருத்தித்துறை கிழக்கு, கரவெட்டி ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இம்மாதம் ஏழாம் திகதியும், சண்டிலிப்பாய், உடுவில், கோப்பாய் உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இம் மாதம் எட்டாம் திகதியும், சங்கானை, தெல்லிப்பழை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்தவர்களுக்கு இம் மாதம் ஒன்பதாம் திகதியும் மேன்முறையீடு பற்றிய விசாரணைகள் யாழ். கல்வித் திணைக்களத்தில் நடைபெறும்.

மேற்படி மேன் முறையீடு செய்தவர்கள் தமது முறைப்பாட்டிற்கு ஆதாரமான ஆவணங்களுடன் குறித்த திகதியில் யாழ். கல்வித் திணைக்களத்திற்கு சமுகமளிக்க வேண்டுமென்றும், குறிப்பிட்ட திகதிகளில் சமுகமளிக்கத் தவறுபவர்களின் மேன் முறையீடுகள் பரிசீலிக்கப்பட மாட்டாது என்றும் யாழ். பிரதிக் கல்விப் பணிப்பாளர் செல்வி திலகவதி பெரியதம்பி அறிவித்துள்ளார். (தி)

## சட்டவிரோத மதுபான விற்பனையாளர் சிக்கினர்!

(விசேட நிருபர்)

குருநகர், போதைவஸ்து ஒழிப்புச்சங்கம் மேற்கொண்ட நடவடிக்கையில் வடிசாராயம், கஞ்சா விற்பனைசெய்தவர் குருநகர் றெக்கிளமேசன், பழைய பூங்கா வீதிப் பகுதிகளில் சிக்கியதாக சங்கத் தலைவர் திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

றெக்கிளமேசனில் 2 பெரல் வடிசாராயம், 1கிலோ கஞ்சாவும் பழைய பூங்கா வீதியில் 4 பெரல் வடிசாராயம் என்பனவும் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாவனையாளர்கள் சங்கத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் விற்பனையாளர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாமில் ஒப்படைக்கப்பட்டு இறுதி எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போதை ஒழிப்புச் சங்கக் கிளை ஒன்று பழைய பூங்கா வீதியில் நிறுவப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (21)

## இடமாற்றம் பெறும் ஆசிரியர்கள்

(யாழ்ப்பாணம்)

மாவட்டங்களுக் இடையிலான வருடாந்த இடமாற்றம் பெறுவோர் பெயர்ப் பட்டியல் கல்வித்திணைக்களம் வெளியிட்டுள்ளது. இதில் கொழும்பு மாவட்டத்தில் இருந்து யாழப்பாண மாவட்டத்திற்கு மாற்றம் பெறுவோர் பெயரும் அவர் இடம் மாற்றம் பெற்றுவரும் பாடசாலையும்.

### கொழும்பு

திரு. டி. ஏச். எதிர்மானசிங்சி யா, ஆனைப்பந்தி மெ. மி.த.க. பா., திருமதி, வீ. லோகநாதன் யா. சிறிய புஸ்பம் மகளிர் வித்தி,, சகோ. ம. தேல்வலா, ஏசி, யா. அச்சுவேலி புனித திரேசா வித்தி, திருமதி எச். எஸ். சற்குணரரசா யா. சுதுமலை சின்மய பாரதி வித்தி., செல்வி. எம் சண்முகநாதன் யா, மானிப், மகளிர் கல்லூரி., திருமதி ...

செல்வி விநோதினி யா. இளையதம்பி வித்தி., திரு. கே. வி. இராசதுரை யா. மீசாலை வீரசிங்கம் ம. வித்தி,, செல்வி என். கோதாரநாயகி யா. மண்டைதீவு றோ. க. பா., செல்வி. எஸ். கணபதிப்பிள்ளை யா. கரம்பன் சண்முகானந்தா ம. வித்தி., திரு. கே. சிறி, கதிர்காமசம்பந்தர் யா., அருநோதையா கல்லூரி., திரு. கே. வரதராசமூர்த்தி யா. கைதடி முத்துக்குமாரசாமி வித்தி., திரு. கே. சிவசுப்பிரமணியம் யாழ். தய்பளை சைவப் நிரகாச வித்தி., திரு. எஸ். நாகராசா யா. உசன் இராமநாதன் ம. வித்., செல்வி எஸ். நவ்லதம்பி யா. இராமநாதன் கல்லூரி சுன்னாகம்.

### கம்பகா மாவட்டம்

செல்வி கே. ரேவதி யா. கரவெட்டி விக்கி. வித்தி., திரு. எஸ். தேவயோகம் யா. மட்டுவில் சந்திர மௌலிச ...

## தென்பகுதி....

1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை இயக்கங்கள் கண்டித்து வந்தன.

ஜனதா விமுக்தி பெரமுனையினர் அடக்கப்பட்டு விட்டபடியால் இனிமேல் எவரும் தமது பாதுகாப்புக்காக ஆயுதங்களைக் கொண்டு செல்லத் தேவையில்லை என சிறீலங்கா அரசாங்கம் கருதுகிறது. இதுவரை காலமும் ஜே. வி. அதிரடியும் அதற்குப் பதிலடியும் என மாறி மாறி பல்வேறு பெயர்களில் தென்பகுதியில் வன்செயல்களில் ஈடுபட்டன. பச்சைப்புலிகள், கறுப்புப்பூனைகள், கழுகுப் படைகள், சிவப்பு சேனை, கறுப்புப்காகங்கள் எனப் பல்வேறு பெயரில் எத்தனையோ ஆயுத ...

## நட்புறவு ஒப்பந்தம் உரிய நேரத்தில் ஒப்பம்

இலங்கை - இந்திய

### எவரின் வற்புறுத்தலும் தேவையில்லை என்கிறார் - ரஞ்சன்

(கொழும்பு)

இலங்கை - இந்திய நட்புறவு ஒப்பந்தம் உரிய நேரத்தில் கைச்சாத்திடப் படுமென்றும் இதற்கு எந்த வற்புறுத்தலோ வலியுறுத்தலோ எங்கிருந்தும் தேவையில்லை என்றும் இலங்கையின் வெளிவிவகார அமைச்சரும் பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரஞ்சன் விஜேரத்தினா நேற்று அமைச்சரவை கூட்டத்தின் பின் பத்திரிகையாளர்களைச் சந்தித்துப் பேசியபோது தெரிவித்தார்.

இம்மாதம் பதினைந்தாம் தேதி சர்வகட்சி மாநாடு மீண்டும் கூடுமென்றும் இதில் கலந்து கொள்ளும் கட்சிகளிலிருந்துஒவ்வொருபிரதிநிதிகளே கலந்து கொள்வார்களென்றும் பத்திரிகையாளரிடம் ஜனாதிபதியின் வெளிவிவகார ஆலோசகர் திரு. பிரட்மன் வீரக்கோன் தெரிவித்தார்,

## தென்னிலங்கையில் இன்று சிங்கள தினம்

(கொழும்பு)

இன்றைய தினத்தை ஸ்ரீ லங்கா அரசாங்கம் சிங்கள தினமாக தென்னிலங்கைப் பாடசாலைகளில்கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது. இந்தத் தினத்தில்தான் அதாவது 1815-ஆம் ஆண்டு மார்ச்மாதம் 2-ஆம் திகதி பிரசித்தி பெற்ற கண்டியஉடன்படிக்கை எழுதப் பட்டது. அவ்வாறு எழுதப் பட்ட உடன்படிக்கைக் கமைய சிங்கக்கொடி அகற்றப் பட்டமையைஎதிர்த்த வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரோவின் சிரார்த்த தினமும் இன்று அமைகிறது. அத்தோடு பாளிமொழி போன்ற பிறமொழி கலப்பற்ற தூயசிங்கள மொழியை சிங்கள மக்கள் எழுத வேண்டும். பேச வேண்டும் என வாதாடிய சிங்கள அறிஞரான குமாரதுங்க முனிதாசாவின் சிரார்த்த தினமும் இதே தினத்தில் வருவதால் ஆண்டுதோறும் மார்ச்மாதம் இரண்டாம் திகதி சிங்கள தினமாக இலங்கை அரசால் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் நேற்று அறிவித்தது.

## புலிகளின்......

(1ம் பக்க தொடர்ச்சி)

இலங்கை அரசாங்கம் நிதானத்துடன்தான் செயல்ப்படும் என அமைச்சர் மேலும் ஒரு நிருபரின் கேள்விக்குப் பதில் கொடுக்கும்போது கூறினார்.

கடந்த சில மாதங்களாக விடுதலைப்புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக இந்த முடிவை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது என பி. பி. சி. முகவர் கிறிஸ் நட்டால் மேலும் குறிப்பிட்டார்.

## மலேசியா, சிங்கப்பூர் ஒய்வூதியம் பெறுபவர்கள்

### யாழ். செயலகம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

ஊதியப் பற்றுச் சீட்டை அவ ...

(விசேட நிருபர்)

குருநகர், போதைவஸ்த்து ஒழிப்புச்சங்கம் மேற்கொண்ட நடவடிக்கையில் வடிசாராயம், கஞ்சா விற்பனைசெய்தவர் குருநகர் றெக்கிளமேசன், பழைய பூங்கா வீதிப் பகுதிகளில் சிக்கியதாக சங்கத் தலைவர் திரு. அ. ஸ்ரனிஸ்லோஸ் நமது நிருபரிடம் தெரிவித்தார்.

றெக்கிளமேசனில் 2 பெரல் வடிசாராயம், 1கிலோ கஞ்சாவும் பழைய பூங்கா வீதியில் 4 பெரல் வடிசாராயம் என்பனவும் அகப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

பாவனையாளர்கள் சங்கத்தால் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் விற்பனையாளர்கள் தமிழீழ விடுதலைப்புலிகளின் முகாமில் ஒப்படைக்கப்பட்டு இறுதி எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. போதை ஒழிப்புச் சங்கக் கிளை ஒன்று பழைய பூங்கா வீதியில் நிறுவப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. (21)

# மலேசியா, சிங்கப்பூர் ஒய்வூதியம் பெறுபவர்கள்

## யாழ். செயலகம் விளக்கம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட ஓய்வூதிய கொடுப்பனவுகள் சம்பந்தமாக யாழ்.செயலகம் நேற்று விடுத்த அறிக்கை கீழே தரப்படுகிறது.

'மலேசியா, சிங்கப்பூர் ஓய்வூதியம் பொறுபவர்களில் இதுவரை தமது விலாசங்களை எமக்கு அனுப்பியவர்களது மாசி மாத ஓய்வூதியப் பற்றுச் சீட்டுக்கள் அவர்களது வீட்டு விலாசத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஏனையோரது பற்றுச் சீட்டுக்கள் அவர்கள் ஓய்வூதியத்தைப் பெற்று வரும் வங்கிகளுக்கே அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. இதுவரை தமது வீட்டு விலாசத்தை எமக்கு அனுப்பாதவர்கள், தயவு செய்து தங்கள் வீட்டு விலாசத்துடன் கூடிய கீழ்வரும் விபரங்களையும் சேர்த்து இம்மாதம் 15-ம் திகதிக்கு முன்னர் எமக்கு அனுப்பிவைத்தால் தொடர்ந்துவரும் மாதங்களுக்கான ஒய்வூதியப் பற்றுச் சீட்டை அவரவர் வீட்டு விலாசங்களுக்கு அனுப்பி வைக்க உதவியாக இருக்கும்.

குறிப்பிட்ட விபரங்கள் வருமாறு, 1. ஓய்வூதிய இலக்கம் (சரியானது) 2. முழுப்பெயர், 3. முகவரி, 4. உண்மையான ஓய்வூதியத் தொகை (டொலரில்) 5. பணம் பெறும் வங்கி. (தி)

## இளம் பெண் தற்கொலை

(யாழ்ப்பாணம்)

முரசுமோட்டையைச் சேர்ந்த கார்த்திகேசு வசந்தி (வயது 20) என்ற இளம் பெண் நஞ்சுக்காய் உண்டு தற்கொலை செய்து கொண்டார்.

பணப்பிரச்சினை காரணமாகவே இவர் தன் உயிரை மாய்த்துக்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகிறது. (தி)

## மாநகரசபைக்கு புதிய 'றோலர்'

(யாழ்ப்பாணம்)

புனர்வாழ்வு, புனர் நிர்மாண அமைச்சினால் யாழ். மாநகரசபைக்கும் 'றோலர்' இயந்திரம் ஒன்று வழங்கப்படவுள்ளது.

யாழ். மாநகரசபை எல்லைக்குட்பட்ட வீதிகளை புனரமைக்கும் முகமாகவே இந்த 'றோலர்' இயந்திரம் வழங்கப் படஉள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பிலிருந்து ஏற்றிவர பொறியியலாளர் உட்பட சிலர் யாழ்ப்பாணத்திலிருந்து சென்றிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. (தி)

## உழவியந்திரம் அன்பளிப்பு

(யாழ்ப்பாணம்.)

தொல்புரம் கமநல சேவை நிலையத்திற்கு புதிய இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஒன்று யாழ். மாவட்ட கமநலசேவை திணைக்களத்தால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

தொல்புரம் பகுதி விவசாயிகளின் பாவனைக்கு குறைந்த வாடகையில் சேவை... இந்த உழவு இயந்தி... பிவைக்கப் பட்ட... கமநலசேவை நிலை... அதிகாரி ஒருவர் தெரி...

இதுபோலயாழ். மா... திலுள்ள ஏனைய கமநல சேவை நிலையங்களுக்கும் உழவு இயந்திரங்கள் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாகஅவர் மேலும் சொன்னார். (தி

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் வைமன் வீதி, 31-ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1990 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 02-ஆம் தேதி அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

மாவட்டங்களுக் இடையிலான வருடாந்த இடமாற்றம் பெறுவோர் பெயர்ப் பட்டியல் கல்வித்திணைக்களம் வெளியிட்டுள்ளது. இதில் கொழும்பு மாவட்டத்தில் இருந்து யாழப்பாண மாவட்டத்திற்கு மாற்றம் பெறுவோர் பெயரும் அவர் இடம் மாற்றம் பெற்றுவரும் பாடசாலையும்.

### கொழும்பு

திரு. டி. ஏச். எதிர்மானசிங்சி யா, ஆனைப்பந்தி மெ. மி.த.க. பா., திருமதி, வீ. லோகநாதன் யா. சிறிய புஸ்பம் மகளிர் வித்தி,, சகோ. ம. தேல்வலா, ஏசி, யா. அச்சுவேலி புனித திரேசா வித்தி, திருமதி எச். எஸ். சற்குணரரசா யா. சுதுமலை சின்மய பாரதி வித்தி., செல்வி. எம் சண்முகநாதன் யா, மானிப், மகளிர் கல்லூரி., திருமதி கே, சந்திரசேகரம் யா. தும்பளை சைவப் பிரகாச ம. வித்., திருமதி தேவதாசன் யா. மகாஜனக் கல்லூரி., திரு. ஆர். குணநாதன் யா. அச்செழு சைவப் பிரகாச வித்தி., செல்வி கே, யோகரத்தினம், யா. பண்டத்தரிப்பு மகளிர் கல்லூரி,, திரு. எஸ். மார்க்கண்டு யா, டிறிபேக் கல்லூரி., திருமதி. ஸ்ரீகந்தரா யா. கைதடி விக்கி. வித்தி., திரு. கே. விஜயகுமார் யா. மறவன்புலோ சகலகலா வல்லி த. க. பா.

செல்வி. மீரா. கணேசன் யா. பருத்தித்துறை புனித தோமஸ் றோ. க. ம, வித்தி., திரு. எஸ். நகுலராசா யா. சாவகச்சேரி இந்துக் கல்லூரி வி. இராசதுரை யா. மீசாலை வீரசிங்கம் ம. வித்தி,, செல்வி என். கோதாரநாயகி யா. மண்டைதீவு றோ. க. பா., செல்வி. எஸ். கணபதிப்பிள்ளை யா. கரம்பன் சண்முகானந்தா ம. வித்தி., திரு. கே. சிறி, கதிர்காமசம்பந்தர் யா., அருநோதையா கல்லூரி., திரு. கே. வரதராசமூர்த்தி யா. கைதடி முத்துக்குமாரசாமி வித்தி., திரு. கே. சிவசுப்பிரமணியம் யாழ். தும்பளை சைவப் நிரகாச வித்தி., திரு. எஸ். நாகராசா யா. உசன் இராமநாதன் ம. வித்., செல்வி எஸ். நவலதம்பி யா. இராமநாதன் கல்லூரி சுன்னாகம்.

### கம்பகா மாவட்டம்

செல்வி கே. ரேவதி யா. கரவெட்டி விக்கி. வித்தி., திரு. எஸ். தேவயோகம் யா. மட்டுவில் சந்திர மௌலிச வித்தி.

### மினுவாங்தொட:

திரு. ரி. எங்கராக யா. புத்தூர் சிறி கோமஸ்கந்தா கல்லூரி.

மிகுதி நாளை. . . .

## வழிபாட்டுத் தலங்கள் புனரமைப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடரநாட்டில் பாதிப்படைந்த அனைத்து வழிபாட்டுத் தலங்களையும் புனரமைக்க அரசு தீர்மானித்ருக்கிறது.

இது சம்பந்தமாக பாதிப்படைந்த வழிபாட்டுத் தலங்களின விபரங்களை பதினான்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவுப் பகுதிகளில் திரட்டப் பட்டு வருவதாக புனர்வாழ்வு, புனர் நிர்மான அமைச்சரோடு சம்பந்தப்பட்ட அதிகாரி ஒருவர் நேற்றுத் தெரிவித்தார்,

பொது வேலைத் திட்டங்களுக்கு உதவி செய்யும் நாடுகள் எதுவும் மேற்படி புனரமைப்பு வேலைக்கு உதவி செய்ய முன்வராத வேளையில் புனர் வாழ்வு, புனர்நிர்மான அமைச்சு பாதிப்படைந்த வழிபாட்டுத் தலங்களை புனரமைக்க முன் வந்திருப்பதாக அந்த அதிகாரி குறிப்பிட்டார், (ந)

### கிழக்கில்.......

(1ம் பக்க தொடர்ச்சி)

செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தியப்படைகள் மட்டக்களப்பு. அம்பாறை மாவட்டங்களில் இருந்து வெளியேறிய பின்னர் இலங்கை ராணுவத்தினர் தற்பொழுதுதான் வெளியில் ரோந்து தொடங்கியுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

### பெருமாளின்......

( 1ஆம் பக்கத் தொடர்ச்சி )

முற்றுகையிட்டு தமது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவரக் கூடிய நிலையில் இருக்கும் போது நாடு கடந்த நிலையில் செயல்பட வேண்டியுள்ள மாகாண சபையின் நிலையில் ஈ. பி. ஆர். எல். எவ் இயக்கத்தின் இந்தப் பிரகடனத்தை யாரும் பெரிதாக எடுத்துக் கொள்வது கடினமாகும். ஏனெனில் இந்திய இராணுவத்தினர் இம்மாத முடிவிற்குள் இலங்கையை விட்டு வெளியேறிய பின்னர் மாகாண சபை செயற்படுவதும் சாத்தியப்படாது. ஆகையாலும் மாகாணசபைக் கூட்டங்கள் வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு வெளியே நடத்தப்பட வேண்டி இருப்பதாலும் இந்த பிரகடணம் நடைமுறைச்சாத்தியமானதா என்ற கேள்வி எழுகின்றது.

இதேவேளை விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் நடத்திவரும் பேச்சுவார்த்தைகளின் விளைவாக இருபகுதியினரும் நடைமுறைபபடுத்த எண்ணியுள்ள விடயங்களை தடுப்பதும் ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கத்தின் நோக்கமாகும்.

### தென்பகுதி....

1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மனித உரிமை இயக்கங்கள் கண்டித்து வந்தன.

ஜனதா விமுக்தி பெரமுனையினர் அடக்கப்பட்டு விட்டபடியால் இனிமேல் எவரும் தமது பாதுகாப்புக்காக ஆயுதங்களைக் கொண்டு செல்லத் தேவையில்லை என சிறீலங்கா அரசாங்கம் கருதுகிறது. இதுவரை காலமும் ஜே. வி. அதிரடியும் அதற்குப் பதிலடியும் என மாறி மாறி பல்வேறு பெயர்களில் தென்பகுதியில் வன்செயல்களில் ஈடுபட்டன. பச்சைப்புலிகள், கறுப்புப்பூனைகள், கழுகுப் படைகள், சிவப்பு சேனை, கறுப்புப்காகங்கள் எனப் பல்வேறு பெயரில் எத்தனையோ ஆயுத அமைப்புகள் தென்பகுதியில் வன்செயல்களில் ஈடுபட்டு வந்தன.

இலங்கை அரசாங்கம் இனிமேல் இத்தகைய தடையுத்தரவை அமுல் செய்ய முன் வந்திருப்பதால் தெற்கே வன்செயல்கள் குறையும் என இலங்கை அரசாங்கம் எதிர் பார்க்கிறது.

இலங்கை அரசின் வேண்டுகோளை ஏற்று பலரும் ஆயுதங்களை ஒப்படைத்து வருவதாகக் குறிப்பிட்ட சிற்றமைச்சர் ரஞ்சன் விஜயரத்னா இற்றைவரை எத்தனை ரகமான ஆயுதங்கள் ஒப்படைக்கப்பட்டன என்றோ அவற்றின் எண்ணிக்கை எவ்வளவு என்பது குறித்தோ தம்மிடம் சரியான புள்ளி விபரங்கள் எதுவும் கிடையாது எனவும் நேற்றைய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

விடுதலைப் புலிகளும் இலங்கை அரசும் நடத்திவரும் பேச்சுவார்த்தைகள் தொடர்பாக ஈ. பி. ஆர். எல். எவ். இயக்கம் கடும் சீற்றம் கொண்டுள்ளது.

**வடக்கு - கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் விடுதலைப் புலிகளுக்கு கூடுதல் செல்வாக்கு இருக்கிறது என்பதை ஈ.பி. ஆர். எல். எவ். இயக்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.**

வடக்கு-கிழக்கு மாகாண சபையின் இன்றைய கூட்டத்தில் உத்தேச பெயர் மாற்றப் பிரகடனத்தை மாகானசபைபின் சுமார் 40க்கு மேற்பட்ட உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டனர். ஆனால் மாகாசணபையில் அங்கம் வகிக்கும் சிறீலங்கா முஸ்லிம் காங்கிரசின் பதினேழு உறுப்பினர்கள் மேற்படி தீர்மானத்தை புறக்கணிப்புச் செய்தனர்.

(கொழும்பு)

இன்றைய தினத்தை ஸ்ரீலங்கா அரசாங்கம் சிங்கள தினமாக தென்னிலங்கைப் பாடசாலைகளில்கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது. இந்தத் தினத்தில்தான் அதாவது 1815-ஆம் ஆண்டுமார்ச்மாதம் 2-ஆம் திகதி பிரசித்தி பெற்ற கண்டியஉடன்படிக்கை எழுதப் பட்டது. அவ்வாறு எழுதப் பட்ட உடன்படிக்கைக் கமைய சிங்கக்கொடி அகற்றப் பட்டமையைஎதிர்த்த வாரியபொல ஸ்ரீ சுமங்கல தேரோவின் சிரார்த்த தினமும் இன்று அமைகின்றது. அத்தோடு பாளிமொழி போன்ற பிறமொழி கலப்பற்ற தூயசிங்கள மொழியை சிங்கள மக்கள் எழுத வேண்டும். பேச வேண்டும் என வாதாடிய சிங்கள அறிஞரான குமாரதுங்க முனிதாசாவின் சிரார்த்த தினமும் இதே தினத்தில் வருவதால் ஆண்டுதோறும் மார்ச்மாதம் இரண்டாம் திகதி சிங்கள தினமாக இலங்கை அரசால் பிரகடனப் படுத்தப் பட்டுள்ளதாக இலங்கை அரசாங்கம் நேற்று அறிவித்தது.

### புலிகளின்......

(1ம் பக்க தொடர்ச்சி)

இலங்கை அரசாங்கம் நிதானத்துடன்தான் செயல்ப்படும் என அமைச்சர் மேலும் ஒரு நிருபரின் கேள்விக்குப் பதில் கொடுக்கும்போது கூறினார்.

கடந்த சில மாதங்களாக விடுதலைப்புலிகளுடன் நடாத்திய பேச்சுவார்த்தைகளின் பெறுபேறாக இந்த முடிவை இலங்கை அரசாங்கம் எடுத்துள்ளது என பி. பி. சி. முகவர் கிறிஸ் நட்டால் மேலும் குறிப்பிட்டார்.

### ஈ. பி' ஆர். எல். எவ்.

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

## சிங்கள குடியேற்றம் நிறுத்தப்பட வேண்டும்

4. தமிழீழத்தில் சிங்களக் குடியேற்றம் தொடர்ந்து நடைபெறுவதாலும், இதனால் இனப்பிரச்சனை மேலும் சிக்கல் அடைந்து சமாதானத்திற்கும் சகஜ நிலைக்கும் பங்சம் ஏற்படலாம் என்பதாலும் சிங்கள குடியேற்றம் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என பொதுக்குழு ஸ்ரீலங்கா அரசை கேட்டுக் கொளகிறது.

## இராணுவத்தை ஈடுபடுத்தக்கூடாது

5. தமிழீழத்தில், தமிழ்,முஸ்லிம் மக்களின் பாதுகாப்பு மற்றும் சட்டம், ஒழுங்கு பிரச்சனைகளில் ஸ்ரீலங்கா இராணுவத்தை ஈடுபடுத்தக் கூடாது என்றும் மாகாண ரீதியாக உருவாக்கப்பட இருக்கும் தமிழ், முஸ்லிம் காவல்துறையினர் வாயிலாகவே பாதுகாப்பு ஒழுங்குகள் மேற்கொள்ளப்படவேண்டும் என்றும் பொதுக்குழு தீர்மானிக்கின்றது.

6. மலையகத்தில் வாழும் தமிழ் மக்களுக்கு சகல அரசியல் உரிமைகளும் வழங்கப் படவேண்டும் என்றும், அவர்களின் சமூக பொருளாதார வாழ்வை மேம்படுத்த ஸ்ரீலங்கா அரசு உருப்படியான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்றும் பொதுகுழு தீர்மானித்திருக்கின்றது.

## வட - கிழக்கில் அவசரகாலம் தேவையில்லை

7. வடக்கு - கிழக்கு மாகாணத்தில் சமாதானமும் சகஜ நிலையும்தோன்றிபிருப்பதால் வடக்குக் கிழக்கில் அவசரகாலசட்டம் நீக்கப்பட வேண்டும் என்றும் பொதுக்குழு தீர்மானித்திருக்கிறது.

## (பெப்ரவரி 27, 28ஆம் திகதிகளில்)

நடைபெற்ற பொதுக்குழு மாநாட்டின்போது கட்சியின் அமைப்புவேலைகளை துரிதப் படுத்துவதற்கு என விசேட அமைப்புக்குழு நியமிக்கப்பட வேண்டுமென கட்சியின் அமைப்பாளர் திரு. பரமமூர்த்தி பிரேரித்து, அதுபற்றி விளக்கம் அளித்தார் இந்தப் பிரச்சினை ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.

கட்சி வேலைகளை விஸ்தரிப்பதற்காக நிதிக்குழு, கொள்கை பரப்புக் குழு, தகவல் சேகரிப்புக் குழு, ஒழுங்கு நடவடிக்கை குழு ஆகியன உருவாக்கப்பட வேண்டுமென தலைவர் திரு. மகேந்திரராஜா வேண்டிக்கொண்டார். இதனை பொதுக்குழு ஏகமனதாக ஏற்றுக்கொண்டது.